# மனித அடிப்படை உரிமைகளை பாதுகாக்க புதிய அரசியல் திட்டம்!

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 141
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்    ஆனி 18    ரபி. ஆகிர் 27    வியாழக்கிழமை    [2-7-70]

உங்கள் பிரச்னை என்ன?

பற்றறி றேடியோக்களை
**மெயின்**
அல்லது
**டிரான்ஸிஸ்டர்**
றேடியோவாக மாற்ற வேண்டுமா?
சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்து தருவோம்.

**V.K. இராஜரத்தினம்**
95, ஸ்ரான்லி றேட் – யாழ்ப்பாணம்.

## அமைச்சர் கொல்வின் விளக்கம்

அகலவத்தை, புதன்

அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கையை முழுமை பெற்ற சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்காக புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க இம்மாதம் ஆட்சிமன்றம் அரசியல் நிர்ணய சபையாகக்கூடும்,

இவ்வாறு தோட்டப்பயிர்செய்கை அரசியல் திட்ட அலுவலக அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினர்.

பெந்தர எல்பிட்டிய ஆட்சிமன்ற உறுப்பினரும் இவரது காரியதரிசியுமான திரு. அல்பேட் காரியவாசத்திற்கு பெந்தரவில் நடந்த வரவேற்புக்கூட்டத்தில் பேசும்போது அவர் தொடர்ந்து கூறியதாவது-

தற்பொழுதைய எங்கள் அரசியல் திட்டம் 'எங்கள் வெள்ளை 'எஜமானர்'களால் எங்கள்மீது சுமத்தப்பட்டது பொதுமக்களுடைய தேவைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்றவகையில் இப்போதைய அரசியல் திட்டத்தை நீக்கி புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கவேண்டியது அவசியமாகும். எமது அரசாங்கத்தையும் கலாச்சாரத்தையும் அமைப்பதற்கு சிங்கள மொழி மூலாதாரமானது. ஆகையால்தான் இப்போதைய அரசாங்கம் சிங்களத்தை தன்னால் முடிந்த அளவுக்கு உயர்வுக்குக்கொண்டுவர முயல்கிறது.

இந்நாட்டின் வெளிநாட்டுச்செலாவணியைப் பெற்றுத் தருவதில் முக்கியமானது றப்பரும் தெங்குப் பொருட்களுமேயாகும். இது தோட்டப்பயிர்ச் செய்கையில் தங்கியிருக்கிறது. ஏழை மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் தமது நலத்தைக்கருதி முதலாளித்துவ அரசைநீக்கி தங்கள்மீது கருணையுள்ள அரசை தெரிவுசெய்து சோஷலிசத்தைநோக்கி நடைபோடச்செய்தனர். அரசாங்கம் ஆட்சிக்குவந்து ஒரு மாதத்துக்குள் மக்களுக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது. காலஞ்சென்ற திரு எஸ். டபிள்யு ஆர்- டி பண்டாரநாயகா சிங்களத்தை அரசகருமமொழியாக்க, முன்னைய அரசாங்கம் அதை திசை திருப்பி விட்டது.

இப்போதைய அரசாங்கம் எல்லா மந்திரிகளின் அலுவலக அலுவல்கள் யாவும் சிங்களத்தில் நடைபெறுவதை யிட்டு பெருமைப்பட்டார். சிலர் நீதிமன்றங்களில் நீதிபரிபாலனத்தை சிங்களத்தில் நடத்தமுடியாதென்றும்கூட இத்தீவிலுள்ள எல்லா மஜிஸ்டிரேட் நீதிமன்றங்களும் இன்று சிங்களத்திலேயே நடைபெறுகின்றது.

படித்துவிட்டிருக்கும்வாலிபர்கள் சிறந்த அறிவைப் பெற்றிருப்பதற்குநான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுடைய வேலையில்லாப்பிரச்னையை உதாசீனப்படுத்தினல் அது அவர்களது பெற்றோருக்கு வசதிக்குறைவை ஏற்படுத்துவதாகும் முன்னைய அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்க்கமுயலவில்லை உலக வங்கியின் ஆலோசனையின்பேரில் பொதுப்பகுதிகளில் காலி இடங்கள் இருக்தும் அவை அப்படியேவைக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள ஆகியவற்றில் எடுத்த புளள்ளிவிபரத்தின் படி 28000 காலிஇடங்கள இருப்பதாகத் தெரிகிறது. 55வயதுடன் ஒய்வு பெறும் இடங்களையும்சேர்த்து இவ்வருட முடிவுக்குள 50,000 இளைஞர்களுக்குஇவ்வரசாங்கம் வேலை வாய்ப்பு அளிக்கும்.

திரு அல்பேட் காரியவாசம் பேசுகையில் கூறியதாவது: முன்னுளில் ஆசியநாடுகள் அரசியல் திட்டத்தை உருவாக்கவே சேர் ஐவர் ஜெனிங்ஸ் போன்றவர்களை வைத்திருந்தனர் உண்மையான சிங்கள மகனுன டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா போன்றவர்கள் இலங்கையின் புதிய அரசியல் திட்டத்தைஉருவாக்கஇருப்பதற்கு சிங்கள மக்களபெருமைப் படலாம்.

திருவாளர்கள டி ஜெயசிங்கி கியூ குணதிலகா ஆகியோரும் பேசினர்.

## "சிறுபான்மையோருக்கு உரிமையை வழங்குவோம் ஆனல் சமஷ்டியை அல்ல"

## செனட் சபையில் றெஜிபெரேரா

கொழும்பு, புதன்

சிறுபான்மை இனத்திற்கு நிட்சயமாக உரிமைகளை வழங்கியே தீருவோம். ஆனல் சமஷ்டியை ஒருபொழுதும் கொடுக்க மாட்டோம். இதற்கு வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களிடையே ஆதரவு கிடையாது என்று செனட்டர் றெஜி பெரேரா இன்று தெரிவித்தார்.

செனட்சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. றெஜி பெரேரா உரையாற்றினர்.

அவர் மேலும் பேசுகையில், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு, எம். திருச்செல்வம் ஆற்றிய உரைக்கு பதிலாக சில கருத்துக்களைத் தெரிவித்தார்.

"செனட்டர் திருச்செல்வம் கூறியதுபோல இந்நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டுதான் இருக்கிறது. ஜூன் 14-ந் திகதி நடந்த மக்கள் வெற்றிதினவிழா இந்நாட்டின் அமைதிப் புரட்சியாக அமைந்துவிட்டது என்றுர்.

செனட்டர் திருச்செல்வம் இன்றும் வ்விவாதத்தில் தொடர்ந்து பேசினர்.

## 'மாற்றுத்திட்டம் வந்ததும்

புத்தர் சிலை

## நடேசன் யோசனை ஏற்கப்பட்டது?

கொழும்பு, புதன்

**அரசியல் நிர்ணயசபையில் புத்தபகவானின் சிலை ஒன்று நிறுவப்படவிருக்கின்றது**

மக்கள் பிரதிநிதிகள் சபை இலங்கையைக் குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கான சட்டம்பற்றி முடிவெடுப்பதற்காக அரசியல் நிர்ணய சபையாக செயல்படும்பொழுது இந்த சிலை அங்கு நிர்மாணிக்கப்படும் என்று [illegible]

புதிய அரசியல் சாஸனத்தை உருவாக்கும் [illegible]

செனட்டர் எஸ். நடேசன் இரு தினங்களுக்கு முன் செனட் சபையில் ஒரு யோசனை கூறியிருந்தது தெரிந்ததே.

பாரதத்தில், லோக் சபையில் புத்தபெருமானின் சிலை நிறுவப்பட்டிருப்பதாகவும், பௌத்தநாடான இலங்கையில் அவ்வாறு ஒரு புத்தர் சிலையை வைப்பது சாலவும் பொருத்தமாக இருக்கும் என்றும் [illegible] சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவில், அரசியல் [illegible]

வடபகுதி ஐ.மே.சபை

## கூட்டுறவு தினவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை சர்வதேசக் கூட்டுறவுத்தின விழாவை இவ்வருடம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் வட்டார ரீதியில் இன்று தொடக்கம் கொண்டாடுவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் கூட்டுறவுடன் இல்லங்களையும் தீபங்களால் அலங்கரிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிகள் நடைபெறும் திகதியும் அளிக்கும் சமாசங்களின் விபரமும் வருமாறு

2 ம் திகதி: யாழ்ப்பாணம் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி; புலோலி ப. நோ. கூ சமாசம், 5-ம்திகதி: பளை பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சமா

## டாக்டருக்கு அஞ்சலி

அமரரான டாக்டர் கே வி, சண்முகரத்தினத்தின் ஐந்தாண்டு நினைவு நாள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஊழியர்களால் கொண்டாடப் பெற்றது. டாக்டரின் படத்தை மாலைகளால் அலங்கரித்திருந்தனர், முதலில் ஞான வைரவர் கோயில் பூசை நடந்தபின், 'ஈழநாடு' காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேலணை கிராம சங்கத் தலைவர் திரு. சகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களிடையே ஆதரவு கிடையாது

யில், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. எம். திருச்

தொடர்ந்து பேசினர்.

# 'மாற்றுத்திட்டம் வந்ததும் பற்றுக்குறை தீர்க்கப்படும்'

## வடமாநில வித்தியாதிபதி சங்கரலிங்கம் தகவல்

யாழ்ப்பாணம், வியா.
கல்வி அமைச்சின் புதிய ஆசிரியர் மாற்றுத்திட்டம் கிடைத்ததும் ஆசிரியர் பற்ருக்குறை தீர்க்கப்படுமென்று, வடமாநில கல்வியதிபதி திரு. வி. சங்கரலிங்கம் அவரைப்பேட்டிகண்ட தேசிய வித்தியாலய அதிபர்கள் சங்க தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

தூதுகோஷ்டியில் சங்கத் தலைவர் திரு. செ. சிவப்பிரகாசம் காரியதரிசி ஐ. ஆர். குமாரசாமிஆகியோர் சென்றிருந்தனர்.

சிறுபாடசாலைகளும் மகா வித்தியாலயங்களும், குறிப்பாக ஆசிரியர்களை உற்பத்தி செய்யாத பிற இடத்து ஆசிரியர்களின் தயவில்தான் தங்கியுள்ள நாட்டுப்புறப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்ருக்குறையையும், தளபாடம்; கட்டடம்; விளையாட்டிடம், இல்லாத குறையையும் நீக்கவேண்டுமென தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது.

சில நகரப்புறப்பாடசாலைகளில் இருக்கும் மேலதிக ஆசிரியர்களையும், கூடுதலான விசேஷ ஆசிரியர்களையும் நாட்ப்டுபுறப் பாடசாலைகளுக்குத் தந்துதவவேண்டுமென்றும், தூதுகோஷ்டி வலியுறுத்தியது.

சுற்று நிருபங்கள் எல்லாம் தமிழிலும் அனுப்பப்படவேண்டுமென்றும் பாடசாலைத்தலைவர்கள் எழுதும் கடிதங்களுக்கு உடன் பதில் வித்தியாதிபதி தரவேண்டுமென்றும் நகரப்புறக் கல்லூரியின் கல்வித்தரத்திற்கு நாட்டுப்புற மகாவித்தியாலயங்களும், தமது கல்வித்தரத்தைக்கொண்டுவரத் தக்கதாக ஒத்தாசை புரியவேண்டுமென்றும், தூதுகோஷ்டியினர் கேட்டுக்கொண்டனர்

வடமாநில கல்வி அதிபதி திரு சங்கரலிங்கம் நாட்டுப்புறப்பாடசாலைகளின் தரம் உயர்த்தப்படவேண்டுமென்பதே அரசாங்கத்தின்கொள்கையானதால் அதன்படி ஆவனபுரிவதாகவும், தெரிவித்தார்.

கல்வித்தரத்தை உயர்த்த ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற இச்சங்கம் முன்னின்று உழைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# சிகானுக் மீது வழக்கு!

## அவரின்றியே விசாரணை

நாம்பென், ஜூலை 1
கம்போடியாவை 30 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த இளவரசர் சிகானுக் தேசத்துரோகத்துக்காகவும், சதிசெய்ததற்காகவும் அவரின்றியே வழக்குவிசாரணை நடாத்தப்படும் எனக் கம்போடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வழக்கு விசாரணை ஜூலை மாதம் 3-ம் திகதி நடைபெறுமெனக் கம்போடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இளவரசர்சிகானுக் வெளிநாட்டிலிருந்த சமயம் மார்ச் 18-ம் திகதி கம்போடியாவில் புரட்சியரசு அமைக்கப்பட்டது. தற்போது இளவரசர் சிகானுக் சீனவில்இருக்கிறர்' அவர் சீன உதவியோடு ஒரு அரசாங்கத்தை அங்குநிறுவியுள்ளார்.

இதையொட்டியே இவர்மேல் வழக்கு விசாரணை நடாத்தப்படவிருக்கிறது ராணுவ விசாரணை மன்றத்தில் இவ்வழக்கு விசாரணை செய்யப்படும். இவ்விசாரணைமன்றம் ஏற்கனவே இளவரசர் சிகானுக்குக்கு எதிரான தஸ்தாவேஜுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்ட 4 இராணுவ அதிகாரிகள் இந்நீதிமன்றத்தில் அங்கம் வகிப்பர்.

முழுவடுப்படுத்தற்காக அரசியல் நிர்ணயசபையாக செயல்படும்பொழுது இந்த சிலை அங்கு நிர்மாணிக்கப்படும் என்று தெரிகின்றது.

புதிய அரசியல் சாஸனத்தை உருவாக்கும் முயற்சியில் அங்கத்தவர்கள் ஈடுபடும்பொழுது புத்த பெருமானின், கருணை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் போன்ற உபதேசங்களை மனதில்நினைவுகூர்ந்துகொள்ளும்வகையில் அவரது சிலையொன்றை ஆட்சிமன்றத்தில் நிறுவவேண்டுமென்று பௌத்தநாடான இலங்கையில் அவ்வாறு ஒரு புத்தர் சிலையை வைப்பது சாலவும் பொருத்தமாக இருக்கும் என்றும்பலர் சுட்டிக்காட்டியிருக்கிறர்கள்.

இந்தியாவில், அரசியல் சாஸனத்தை உருவாக்கிய மேதை டாக்டர் அம்பேத்கார் ஒரு பௌத்தர் என்பதையும் இந்திய அரசு தனது சின்னமாக அசோக தர்மசக்கரத்தை ஏற்றுக்கொண்டிருப்பதையும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறர்கள்.

(சி பி. ஏ)

# டாக்டர் பெரேரா வெளிநாடு செல்வார்

கொழும்பு, புதன்
செப்டம்பர் மாதம் சைப்பிரஸிலும் கோப்பன்ஹேகனிலும் நடைபெறவிருக்கும் நிதிசப்பந்தமான மாநாடுகளில் கலந்துகொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவுக்கு நிதிஅமைச்சர் டாக்டர் என் எம் பேரேரா தலைமையில் செல்லும் தூதுகோஷ்டி கலந்துகொள்ளும்.

சைப்பிரஸில் செப்டம்பர் 17-ம் 18-ம் திகதிகளில் நடைபெறும் சாம்ராஜ்ய நாடுகள் நிதிஅமைச்சர்கள் கூட்டத்தில் டாக்டர் பெரேரா கலந்துகொள்வார். கோபன்ஹேகனில் நடைபெறும் சர்வதேச நாணயசபை அதிகாரிகள் மகாநாட்டிலும் டாக்டர் பெரேரா தலைமையில் செல்லும் கோஷ்டி கலந்துகொள்ளும்'

## இன்று நாடக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வியா.
புனித யுவானியர் கழகத்தினர் இன்று மாலை ''உயர்ந்த உள்ளம்'' என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தை யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில்மேடையேற்றுகின்றனர்.

உபதபாலதிபர்கள்

## ரூ. 25 ஆயிரம் நன்கொடை

கோட்டை, புதன்
உபதபாலதிபர்கள் சங்கத்தின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் நாட்டைக் காக்கும் நிதிக்கு இன்று வழங்கப்பட்டது. உதவி தபால் தொடர்பு அமைச்சர் திரு, வி. ரி. ஜி. கருணாரத்னவிடம் இந்தப்பணம் கையளிக்கப்பட்டது.

கூட்டுறவுத்தின விழாவை இவ்வருடம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் வட்டார ரீதியில் இன்று தொடக்கம் கொண்டாடுவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் கூட்டுறவாளர்களிடையேயும் பாடசாலை மாணதர்களிடையேயும் கூட்டுறவுக் கல்வியைப் பரப்பக் கூடியவாறு கட்டுரை, பேச்சு, கீதம், நாடகம் அட்டைவாய்ச்கியங்கள் புனைதல் முதலியவைகளில் போட்டிகளையும், கருத்தரங்குகள் பிரசாரக் கூட்டங்கள், கூட்டுறவாளர்கள் பவனிகள் ஆகியவற்றையும் இடம்பெறச் செய்து சிறப்பாக நடாத்தஏற்பர்டு செய்யப்பட்டுள்ளது

இத்தினத்தில் கூட்டுறவுக் கட்டிடங்கள் இல்லங்கள் யாவற்றிலும் கூட்டுறவுக் கொடிகளைப் பறக்க விடுவது நிகழ்ச்சிகள் நடைபெறும் திகதியும் அளிக்கும் சமாசங்களின் விபரமும் வருமாறு

2 ம் திகதி: யாழ்ப்பாணம் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி; புலோலி ப. நோ. கூ சமசம், 5-ம்திகதி: பளை பச்சிலைப்பள்ளி ப நோ கூ சமாசம் 8-ம் திகதி நல்லூர் பயிற்சிக்கலாசாலை. (யாழ்ப்பாணம் காரியாதிகாரி கூட்டுறவுச் சங்கங்கள்) பூநகரி ப நோ கூ சங்கசமாசம் 9-ம்திகதி இளவாலை ப நோ கூ சங்கங்கள் 10-ம் திகதி வலி. ப நோ கூ சங்கசமாசம் (நீர்வேலி) 11-ம்திகதி தீவுப்பகுதி ப நோ கூ சமாசம். தென்மராட்சி கிழக்கு ப நோ கூ சமாசம், (கொடிகாமம்) 17-ம் திகதி வலி. மேற்கு ப. நோ கூ சங்க சமாசம், 18-ம் திகதி வலி வடக்கு ப நோ கூ ச சமாசம் (தெல்லிப்பழை)

(கு வி ம)

டாக்டரின் படத்தை மாலைகளால் அலங்கரித்திருந்தனர், முதலில் ஞான வைரவர் கோயில் பூசை நடந்தபின், 'ஈழநாடு' காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேலணை கிராம சங்கத் தலைவர் திரு. சதாசிவம், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய முன்னள் அதிபர் அம்பிலைகபாகன் முதலியோர் டாக்டரின் குணதியங்களைப் பாராட்டிப் பேசினர் யாழ்ப்பாண திவ்வியபஜீவன சங்கத்தார் பஜனை நடாத்தினர்.

கொழும்பு. புதன்
திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் 64-ம் அண்டு வீழ்ச்சியடைந்த சூழ்நிலைபற்றி விசாரணை செய்யவேண்டுமென்று அரசாங்கத்திலுள்ள பின் ஆசன எம். பிக்கள் கோரியுள்ளார்கள்

# யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், வியா.
யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வார்ட்டுகளில் அடிக்கடி, நோயாளிகளின்பொருட்கள் திருட்டுப்போவதாக பொறுப்பதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

நோயாளிகள், சத்திரசிகிச்சைக்காகவோ, 'எக்ஸ்ரே' படம் பிடிப்பதற்காகவோ கொண்டு செல்லப்படும்போது, இப்படியான திருட்டுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. இரவுநேரங்களிலும் சில சாமான்கள் திருடப்பட்டிருப்பதாகவும் நோயாளிகள் தெரிவித்தனர்.

தேடம்பழம், பிஸ்கட் ஹோர்லிக்ஸ், பிளாஸ்க், போன்ற பொருட்கள் திருட்டுப்போவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. (கு.வி.ம)

# கட்டான தொகுதியிலும் ஸ்ரீலங்கா அமோக வெற்றி!

கோட்டை, வியாழன்
கட்டான தொகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. கே. சி. டி சில்வா 10789 அதிகப்படியான வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது நடக்கவிருந்த இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சிங்கள மகா ஜனக் கட்சியின் வேட்பாளர் பெர்ணண்டோ புள்ளே திடீர் மரணமானதால் கட்டான தேர்தல் ஒத்திப்போடப்பட்டது.

இத் தொகுதியில் 1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் 2787 அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இந்தத் தேர்தலில் அவர் படுதோல்வியடைந்துள்ளார். தேர்தல் முடிவு விபரம் வருமாறு;

**கட்டான**

**தேர்தல் தொகுதி–7**

| | | |
|---|---|---|
| திரு: கே: சி. டி. சில்வா | ஸ்ரீலங்கா சு. க. | 22,370 |
| திரு. விஜயபால மெண்டிஸ் | ஐ. தே. க. | 11,581 |
| மேலதிகம்: | | 10,789 |

# வாடகை வீடுகள் பற்றிய விபரம் கோருகின்றனர்

கொழும்பு, புதன்
வாடகைக்கு குடியிருப்பவர்கள் தங்களுக்குள்ள கஷ்டங்கள், இடையூறுகள் பற்றியும் வீட்டுச் சொந்தக்காரர்களின் அடாபிடிகள் பற்றியும் தங்களுக்கு விபரங்கள் தருமாறு வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமனல் நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

வாடகை வீடுகள் பற்றியும், அறவிடப்படும் வாடகை விபரங்கள் பற்றியும், ஏனைய தகவல்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்தக் குழுவை அமைச்சர் நியமித்திருக்கிறர்.

வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு 'நிந்தம்' அல்லது சந்தோஷம் கொடுத்திருப்பது பற்றிய விபரங்களையு தங்களுக்கு அறிவிக்கும்படியும், விபரம் தருவோர் பற்றிய தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் விசாரணைக் குழுவினர் அறிவித்துள்ளனர், கொழும்பு ஏழு, விஜயராம மாவத்தையிலுள்ள குழுவின் செயலகத்துக்கு இந்தவிபரங்களைத் தெரிவிக்குமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

## நிறைவேறியது

கோட்டை, புதன்
செனட் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்து நன்றிதெரிவிக்கும் பிரேரணை எதிர்ப்பு இன்றி இன்றிரவு நிறைவேறியது.

## இன்று

வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவு சமாசத்திஞல் சர்வதேச கூட்டுறவாளர் விழா இன்று சமாச முன்றலில் நடைபெறும். விழாவோடொட்டி விளையாட்டு நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள். நடனம் சங்கீதம் முதலிய நிகழ்ச்சி இடம் பெறவுள்ளன.

## கம். கட்சியின் 27-வது வருடாந்ததினம்

கோட்டை, புதன்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது வருடாந்ததினம் இன்று கொண்டாடப்படுகின்றது. கொழும்பில் ஹைட்பார்க்கில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டமொன்றில் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வரும் கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் கலந்துகொள்வார்கள். இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. ரி. பி. சுபசிங்கா, சமசமாஜக்கட்சியின் பொதுக்காரியதரிசி திரு. பேர்ணுட் சொய்ஸா ஆகியவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

# காரைநகரில் சேலை திருட்டு: 18 வயது வாலிபன் கைது

யாழ்ப்பாணம்,வியாழன்
பெறுமதியுள்ள யங்கியையும் கூறை சேலையொன்றையும், பெனுறிஸ் கொட்டன் சேலையையும், வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் முத்துக்குமாரசாமி மணிவாசகம் என்ற 18 வயது வாலிபனை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சேலைகளை காரைநகரிலுள்ள வீடொன்றில் திருடியதாக, விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இச் சேலைகளுக்கு சொந்தக்காரர்கள், தகுந்த அத்தாட்சியுடன், யாழ்ப்பாணம்பொலிஸாருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

கான்ஸ்டபிள் இரத்தினம். இவ் வாலிபனை கைதுசெய்து மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார். இம் மாதம் 7ம் தேதி ஊர்காவற்றுறை கோர்ட்டில் ஆஜர் செய்யும்படிம், அதுவரை ரிமாண்டில் வைக்கும்படியும், மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

# பிரம்மபுத்ரா நதி உடைந்து சேதம்

ஷில்லாட், ஜூலை 1
ஜோர்ஹாட், பார்பெட்டா கோல்பாரா நௌகால் ஆகிய இடங்களுக்கருகில் பிரம்ம புத்திரா நதியின் கரைகளில் உடைப்புகள் ஏற்பட்டு சுமார் 200 கிராமங்களில்தண்ணீர் புகுந்து சேதப்படுத்தின. இதனல் சுமார் 175 லட்சம்சனங்கள் பாதிக்கப்பட்டிருகிறர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### நன்றி நவிலல்

மேலைப் புலோலி அத்தியடியில் 25-6-70ல் இவ்வுலக வாழ்வை நீத்த வெற்றிவேற்பிள்ளை கோவிந்தபிள்ளை அவர்களின் துக்க வைபவத்தில் கலந்துள்ள, அனுதாபச் செய்திகள் அனுப்பிய பெரியார்கள் சுற்றத்தவர்கள் நண்பர்கள் அயலவர்கள் எல்லோருக்கும் எனது பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது மகன் சோ. சிவபாலன்

2164

### விற்பனைக்கு

பாவித்துக் கழித்த 5X60X15 சைஸ் 5 ரயர்கள் விற்பனைக்குண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.

3150

நாய்:

சில்வர் கிறே (Silver Grey) அல்ஷெசன் பெண் நாய் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K. குமாரசாமி, 3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி, நல்லூர் வீதி.

3149

### தேவை

நல்ல நிலையிலுள்ள பன்ரம் (B. S. A) மோட்டர் சைக்கிள் தேவை. நேரில் வருவோர் மாலை 4-30க்கு பின் வரவும் தொடர்பு கொள்க. க. இராமநாதன், வாலையம்மன் கோவில் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

3143

### கொக்குவில் கிராமச் சபை கேள்வி விளம்பரம்

1. 1970-ம் ஆண்டு ஆடி மாதம் 17-ம் திகதி காலை 9-30 மணிவரை கொக்குவில் கிராமச் சபைத் தலைவரால் கீழ்க்காட்டிய வேலைக்குச் 'சீல்' வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

'நவரத்தினராசா வீதி வேலை'

2. ரூபா 25/-கட்டுக்காசு கட்டியதன் பேரில் கி. ச தலைவரால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 16-7-70 தேதிக்குப்பின் கொடுபடமாட்டா.

3. மேலதிகமான விபரங்கள் எதுவும் கிராமச்சபைத் தலைவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. க. சபாபதி
தலைவர்
கிராமச்சபை,
கொக்குவில்.

2338

### வகுப்புகள்

இசைவகுப்பு:

வாய்ப்பாட்டு உயர்தர இசைவகுப்புகள். நடத்துபவர் செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 57, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3133

**MANOHARA**
**JAFFNA**

Daily 4-45, 7&9-45 p.m.
Poya-Pre. Poya 10.30 a.m.
Lando Duzzanch,
Jean Clauderialy
in
OPERATION ST. PETER
(Eastman color)

ராஜா (யாழ்ப்பாணம்) நாட்டைக் காக்கும் நிதிக்காக இன்று மட்டும் 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா—சோ

நடித்த

# ஒளிவிளக்கு

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த!

# இரு கோடுகள்

1964-ம் ஆண்டின் 28-ம் இலக்க காணி எடுத்தற் [திருத்தச்] சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460] 7-ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலக்கம் எல் பி/ஏ சி கியு/54 பீ

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு 1970-ம் ஆண்டு ஆடி மாதம் 2-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி 14913 பகுதி [111]ல் பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்: கச்சிலைமடு.
காரியாதிகாரியின் பிரிவு: வவனியா வடக்கு.
காணியின் பெயர்: உடையார் சமளங்குளம், நாவலடி தோட்டம், மருவாரிவயல், குருமன்காடு.
ஆரம்ப பட இலக்கம்: ரோப்போ பி. பி. 26.
துண்டு இலக்கம்: 2, 3, 10, 11.

ஆ. பெருமையினர்,
மேலதிக அரசாங்க அதிபர்.
வவுனியா மாவட்டம்.

கச்சேரி வவுனியா
21-6-70.

GP 3237

அரசாங்கக் கேள்விகள்

கட்டிடங்கள் திணைக்களம்

என் 2010 - நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் புதிய மின்வலு நிலையம் அமைத்தற்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதலுக்கான கடைசித்திகதி 1970-7-28

சுகாதாரத் திணைக்களம்

என் 2015 - 1970/71 ஆண்டிற்கு வவுனியாப்பகுதியிலுள்ள வைத்திய நிலையங்கட்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 1970-7-22 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

என் 2021 - 1970/71 நிதி ஆண்டில் யாழ்ப்பாணப் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1970-8-3-ந் திகதி காலை 10 மணிக்கு முடிவடையும்.

நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 2026 யாழ்ப்பாண உபபிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. (1) கோட்டை கட்டின குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் செய்வதற்கு மிகுதி வேலைகள் செய்தல். (2) காரியாலை நாகபடுவான் இடதுகரைத் திட்டத்தின் கீழ் 1-ம் கிளை வாய்க்காலின் 1-ம் மைல் (3) அம்பலப் பெருமாள் குளத்தின் கீழ் இடதுகரை பிரதான வாய்க்காலின் விநியோக வாய்க்கால் கட்டுதல்.

மேலதிக விபரங்களுக்கு 1970-7-2 ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

GP 3283


## இன்றைய பலன்

ஆனி மாதம் 18-ம் திகதி [2-7-70]

மேஷம்;- மனநிறைவு, பிரிந்தவர் இணைவர், பழைய நினைவுகள்.

ரிஷபம்:- தெளிந்த மனப்போக்கு, கல்வியில் ஆர்வம், தெய்வநம்பிக்கை.

மிதுனம்;- பரந்தநோக்கு. பதவியில் உயர்வு, பிரயாண எண்ணங்கள்:

கடகம்;- இனியவைஉரைத்தல், இல்வாழ்க்கை சிறக்கும் [illegible]

# வேலணைச் செய்திகள்

### -நமது வேலணை நிருபர்- குடிநீர் கிடைக்கும்

புங்குடுதீவு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவது சம்பந்தமாக ஆராயும் பொருட்டுச் சமூக சேவை உதவி அதிபர் திரு. பெரேரா கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார். திரு. பெரேராவும், உதவி பணிப்பாளர் திரு சி நீர்க்குணானந்தனும் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினரை அவரது இல்லத்தில் சந்தித்தனர், அவருடன் ஊரதீவு, நடுக்குறிச்சி, குறிகாட்டுவான், வல்லன் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர் விரைவில் இப்பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்யப்படுமென திரு. பெரேரா தெரிவித்தார்.

0 0 0

### தாச்சிப் போட்டி

சிவகடாட்சம் வெற்றிக் கேடயத்திற்கான தாச்சிப் போட்டியின் இறுதி ஆட்டம் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையத்திற்கும், தேவிகோட்டம் சனசமூக நிலையத்திற்கும் இடையே நடைபெற்றது.

இறுதியில் செட்டிபுலம் சனசமூகநிலையம் 3-2 பழங்களால் வெற்றியீட்டியது. இக்கோஷ்டிக்கு சி சிவராசா தலைமைவகித்தார்.

0 0 0

### 'ஆசிரியர் பற்றுக் குறையை நீக்குக'

வேலணை மத்திய மகா வித்தியாலயம், புங்குடுதீவு மகாவித்தியாலயம், அனலைதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றுக் குறையை உடனடியாக நீக்குமாறு தீவுப்பகுதி எம். பி. கல்வியமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

0 0 0

### நியமனம்

இரண்டாந்தர அதிபராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற திரு வி. செல்லத்துரை இம்மாதம் முதலாந் திகதி தொடக்கம் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டார்

0 0 0

### ஒன்றுபட்டே உரிமைபெறலாம்

''இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் ஒருமித்து ஒரு கொடியின் கீழ் ஒன்றுபட்டே உரிமையைப்பெற முடியும்'' என வேலணை நேத்தாஜி சன சமூக நிலையத்தினர் தமக்களித்த வரவேற்பின்போது ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் கூறினார். கூட்டத்திற்கு சின்னத்துரை முத்துத்தம்பி தலைமை வகித்தார்

0 0 0

### விளையாட்டுப் போட்டி

திருமதி அன்னம் வாதவூரின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான இறுதி ஆட்டம் வேலணையில் நாளை நடைபெறவுள்ளது. இப்போட்டியையடுத்து பரிசளிப்பும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. தீவுப்பகுதி எம். பி. கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராக பங்குபற்றுவார். தீவுப்பகுதி காரியாதிகாரி திரு எஸ். விநாயகலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வீ தெய்வேந்திரன், பொதுச் செயலாளர்: திரு வே. நாகமுத்து, பொருளாளர்: திரு. ந சா. அருள்ராசா, உப தலைவர்: திரு. உவை. மகறூஸ், உப செயலாளர்: திரு. மு. தம்பையா.

நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் ரி. பரமானந்தம், செ. நல்லையா, ஏ எச். எம். மஜீட், மு கதிரேசு, வீ. தங்கராசா, எம் ஐ எம். ய்மால்டீன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

கோட்டை, புதன்

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியசங்கத்தின் 13-வது வருடாந்த மகாநாடு கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

[illegible]வர்: திரு. ஏ. பி சி. டி சில்வா, உபதலைவர்கள் திரு பராக்கிரமரணசிங்கா, திரு. சி எஸ். பாக்கியம், திரு. எம். ஏ. கந்தையா, பொதுச் செயலாளர்: எம். என். பர்ணுந்து. பதில் [illegible]

## ஒருநாள் சம்பளம்!

உடுப்பிட்டி, புதன்

''நாட்டைக் காப்பாற்றுங்கள்'' நிதிக்குத் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்குவதென வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரிய கழகம் முடிவுசெய்துள்ளது.

மேற்படி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில் ஆசிரியர்கள் இந்நிதிக்குத் தாராளமாகப் பணவுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

''தற்போது நாட்டின் நிதிநிலைமை படுமோசமாயிருக்கின்றமையினால், குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் தமது தேசத்தைக் காப்பாற்றுவதற்குப் பண உதவி புரியத் தயங்கக்கூடாது. இந்நிதிக்கு உதவவேண்டியது ஒவ்வொருநற்பிரஜையினுடைய கடமையாகும்'' என்றும் கல்லூரி அதிபர் வற்புறுத்தினார்.

## புதைபொருள் ஆராய்ச்சி

இரத்தினபுரி, புதன்

இரத்தினபுரி வளவை ஆற்றுப்பகுதியில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பதான புதைபொருள் ஆராய்ச்சி இன்று ஆரம்பமாகியுள்ளது புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம் அகழ்வுவேலைகளை அமெரிக்க ஆராய்ச்சி நிலையத்துடன் நடாத்துகிறது.

## திருவிழா

உடுவில், புதன்

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா, திருக்கல்யாணவிழா ஆகியன ஜூலை, 2 ம், 3 ம். 4-ம் திகதிகளில் நடைபெறும்.

## சிதம்பராக்கல்லூரி

# இரங்கநாதன் இல்லம் முதலிடம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி முன்னாள் அதிபர் திரு. வி. நடராசா தலைமையில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் இரங்கநாதன் இல்லம் 188 புள்ளிகள் பெற்று முதலாவது இடத்தையும், சிதம்பரப்பிள்ளை இல்லம் 136 புள்ளிகளையும், குமரகுரு இல்லம் 127 புள்ளிகளையும், சின்னத்தம்பி இல்லம் 103 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டன. இல்ல அலங்கரிப்பு இரங்கநாதன், சிதம்பரப்பிள்ளை, குமரகுரு இல்லகளுக்கு முறையே கிடைத்தன:

போட்டி விபரம் வருமாறு:

பழைய மாணவர் ஒரு மைல் ஓட்டம்: வி குணநாதன். வட்டார அஞ்சல் ஓட்டம்: ரேகு வட்டாரம். சாம்பியன் ஆண்கள்- அதி கீழ்ப்பிரிவு: எஸ் வில்வராசா, கீழ்ப்பிரிவு: கே நிரஞ்சனகுமார், எஸ் விஜயராசா.

மத்தியபிரிவு: பி ராசகா [illegible] மீட்டர்: எஸ் ஜெயமணி, எஸ் சற்குணசிகாமணி, ஆர் அருள்ஞானம்.

நீளம்பாய்தல்: ரி சொர்ணவடிவேல், எஸ் சாந்தகுணவடிவேல், பி லோகநாதன்:

உயரம்பாய்தல்: ரி இராமச்சந்திரன், எஸ் பாலசுப்பிரமணியம், எஸ் சந்திரலிங்கம்.

கெந்தியடித்தல்: வி பி சந்திரலிங்கம், எஸ் ஜெயமணி, ரி சிவசுப்பிரமணியம்.

கோலூன்றிப் பாய்தல்:- ரி சிவசுப்பிரமணியம், ரி இரவீந்திரசிகாமணி.

குண்டு எறிதல்; யூ சந்திரகுமார், எஸ். மனோகரன். ரி பிரபாகரன், பரிதிவட்டம்' எஸ். மனோகரன் எம். குலசிங்கராசா, ரி. சிவசுப்பிரமணியம்.

மேற்பிரிவு பெண்கள்:-75 மீட்டர் கயிறு அடித்தல்: வி பரமேஸ்வரி, எஸ். அமிர்தேஸ்வரி, ஈ. காமினிதேவி

200 மீட்டர் ஓட்டம்:- எஸ். அமிர்தேஸ்வரி, வி. பரமேஸ்வரி, என். ரூபமலர்

நீளம் பாய்தல்: வி. பரமேஸ்வரி, எஸ். அமிர்தேஸ்வரி, யு. பரமேஸ்வரி.

தடைஓட்டம்: எஸ். வனஜா, கே. பரமேஸ்வரி, வி. சிவக்கொழுந்து இலக்குக்கு எறிதல்;- ஆர். விஜயலட்சுமி கே. மகேந்திர [illegible]

## "மக்கள் மொழியில் பரவவேண்டும்"

மாவிட்டபுரம், புதன்

''இன்றைய உலகில் அறிவியல் வளர்ச்சி சகல துறைகளிலும் புதுமைகளையும் மாற்றங்களையும், தினமும் ஏற்படுத்தி வருகிறது. எனவே இன்றைய மக்கள் இந்த மாற்றங்களை எல்லாம் அறிந்து அதற்கமைய ஒழுகி வாழவேண்டியிருக்கிறது. இதற்கு அறிவியலும் மற்றும் சகல கலைகளும் மக்களுடைய மொழியில் பரவுதல் அவசியம்''.

இவ்வாறுவட்டுக்கோட்டை கிழக்கு இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. சு. முருகேசு இயற்றிய 'கணக்குப்பதிவும் கணக்கியலும்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அரசாங்க நூல் வெளியீட்டுப்பகுதியை சேர்ந்த திரு இ. அம்பிகைபாகன் (அம்) கூறினார்.

விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் எமக்குத் தேவையான கலைச் சொற்களை தொடுக்கும் போது அப்பணியில் ஈடுபவர்கள் மிகவும் கவனமாகவும் விரிவாகவும் சிந்திக்கவேண்டும் என்றார்.

மற்றும் பலர் உரையாற்றினர்.

## புங்குடுதீவு ம. வி. பரிசளிப்பு விழா

புங்குடுதீவு, வியா.

புங்குடுதீவு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா இன்று வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார். திருமதி சி. இரத்தினம் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்குவார்.

## சஞ்சிகைகள் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியா.

சஞ்சிகைகள்பற்றிய கருத்தரங்கம் இம்மாதம் 11-ம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுஜன நூலகத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கை பொதுஜன நூலகப் புத்தகக் குழு ஏற்பாடு செய்துள்ளது. ஆங்கில தமிழ் சஞ்சிகைகளைப் பற்றி பரவலாக அறிந்து கொள்வதற்கும் வாசகர்கள் பங்குபற்றித் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) நாகேஷ்—ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த

## இரு கோடுகள்

தினசரி 4 காட்சிகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

ரவிச்சந்திரன் — சரோஜாதேவி
நாகேஷ், பாலையா
நடித்த

# ஓடும் நதி

டைரக்ஷன்: தாதாமிராசி
பின்னணி: சுசிலா - சௌந்தரராஜன்.


இப்பொழுது திரையிடப்படுகிறது

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

## எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
## நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடித்த




போக்கு. கல்வியில் ஆர்வம், தெய்வநம்பிக்கை.

மிதுனம்;- பரந்தநோக்கு. பதவியில் உயர்வு. பிரயாண எண்ணங்கள்:

கடகம்;- இனியவைஉரைத்தல். இல்வாழ்க்கை சிறக்கும் புகழுமுண்டு'

சிம்மம்:- பணச்செலவு அதிகரிக்கும், படாடோப வாழ்வு. பின்தங்கநேரிடும்.

கன்னி.- குடும்பத்தில் குமைச்சல், வேண்டாததலையீடு. அகாலபோசனம்.

துலாம்:- இன்பத்தின் இனியபார்வை, புதிய உற்சாகம், பொருள்வரவு.

விருட்சிகம்:- பொருட்பிணக்கு, பொல்லாங்குகேட்டல், வழக்கு விவகாரம்.

தனுசு.- கலையுலக தொடர்பு, கற்பனைமிகுதி, இசையில் ஆர்வம்.

மகரம்:- உயர்ந்த எண்ணம், உதவிகள் கிடைக்கும், இலட்சிய வாழ்வு.

கும்பம்:- பிணைப்பில் துண்டிப்பு, துயரத்தின் நிழல், தனிவழிநாட்டம்.

மீனம்:- முக்கனிபோல் வாழ்க்கை இனிக்கும், முன்னேற்றமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கைலாசநாதர் சிவன்கோவிலில் துவஜாரோகணம் இன்று நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தை சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் சிறப்பாக நடத்திவைக்கவுள்ளார்.

REGAL JAFFNA
Daily 4 Shows
Alfred Hitch Kichi
Master piece
Paul Newman Julte Andrews
in
TORN CURTAIN

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா
2-30 மணி
நான் வளர்த்ததங்கை

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடி...
சந்திரோதயம்

...வர்: திரு. ஏ. பி சி.டி சில்வா, உபதலைவர்கள் திரு பராக்கிரமரணசிங்கா, திரு. சி எஸ். பாக்கியம், திரு. எம். ஏ. கந்தையா, பொதுச் செயலாளர்: எம். என். பர்ஞுந்து. பதில் பொதுச் செயலாளர்: டபிள்யூ. ஓ. வித்தான, உதவிச் செயலாளர்கள் ஏ. எச். ஏ. காதர், எம். அமரசேகரா, பொருளாளர் சி. டி பெரோ, உதவிப்பொருளாளர்: பி. டி. டி சில்வா 9பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

வேலணை புதன்

வேலணை நேதாஜி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் திரு சி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: திரு க ஆனந்தன், உபதலைவர்: திரு சி நாகலிங்கம், செயலாளர்: திரு நா. பேரம்பலம், உபசெயலாளர்: திரு இ கந்தசாமி, தனாதிகாரி: திரு சி. பொன்னம்பலம், கணக்குப் பரிசோதகர்: திரு ந தங்கவேலு. மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

## சமசமாஜ நிர்வாகிகள்

கோண்டாவில், புதன்

கோண்டாவில் சமசமாஜ வாலிப சங்க 6-வது ஆண்டுப்பொதுக்கூட்டம் கோண்டாவில் மேற்கு அமரகவி சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது பின் வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப் பட்டனர்:

தலைவர்: பொ அழகரத்தினம், உப தலைவர் சு லோகநாதன், இணைச்செயலாளர்: நா துரை, க அரியரத்தினம், பொருளாளர்: நா. சிவஞானம்.

பகுதி எம். பி. கா. ... இரத்தினம் பிரதம ...ருந்தினராக பங்குபற்றுவார் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

## ஜீவனாம்சம் கட்டாதவருக்கு சிறை

அம்பன், புதன்

அம்பனைச் சேர்ந்த சுப்பிரமணியம் குலவீரசிங்கம் என்பவர் அவரது மனைவிக்கு பராமரிப்புப் பணம் கட்டவில்லையென அவரின் மனைவியால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது

எதிரி தன்னிடம் பராமரிப்புக் கட்டப்பணமில்லையெனக் கூறினர். மாஜிஸ்திரேட் ஒரு மாதச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## லாலா சோப் பரிசுப் போட்டி

புத்தூர் செவ்வாய்

லாலா சோப் ஸ்தாபனத்தாரால் நடாத்தப்பட்ட பரிசுத்திட்டப் போட்டி லாலா சோப் தொழிற்சாலையில் செவ்வாய்க்கிழமை மாலை அதிர்ஷ்டம் பார்க்கப் பட்டது.

மத்தியஸ்தர்களாக கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம், வடபிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகிளைத் தலைவர் திரு. எம். நடராசா, முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, இலங்கை வங்கி சுன்னாகம் கிளை மனேஜர் திரு. வி. விக்னேஸ்வரன், அச்சுவேலி சென் திரேசா பாடசாலை மதர் சுப்பீரீயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாதன். வட்டார அஞ்சல் ஓட்டம்: ரேகு வட்டாரம். சாம்பியன் ஆண்கள்- அதி கீழ்ப்பிரிவு: எஸ் வில்வராசா, கீழ்ப்பிரிவு: கே நிரஞ்சனகுமார், எஸ் விஜயராசா.

மத்தியபிரிவு: பி ராதா ராதாகிருஷ்ணன், அதிமேற்பிரிவு: எஸ் தங்கவடிவேல்.

சாம்பியன் பெண்கள்- கீழ்ப்பிரிவு: கலாமணி, ரி சரோஜினி மத்தியபிரிவு: வி பரமேஸ்வரி அதிமேற்பிரிவு: 800 மீட்டர்: எஸ் தங்கவேல், ஏ கதிர்காமலிங்கம், என் கோபுலு.

குண்டு எறிதல் எஸ் தங்கவடிவேல், எஸ் செல்வச்சந்திரன், வி கிருஷ்ணமூர்த்தி. மேற்பிரிவு: 800

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 2—7—70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓ... விளையாடு பாப்பா.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 பாட்டு, 7-45சித்திரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

மேஸ்வரி, எஸ். அமிர்தேஸ்வரி, யு. பரமேஸ்வரி.

தடைஓட்டம்: எஸ். வனஜா, கே. பரமேஸ்வரி, வி. சிவக்கொழுந்து இலக்குக்கு எறிதல்;- ஆர். விஜயலட்சுமி கே. மகேந்திரராணி, பி. குணேஸ்வரி.

## 32,000மூடை மா சேதமடைந்தது

மூதூர், புதன்

80 லட்சம் ரூபா பெறுமதியான 32,000 மூடை இத்தாலிய கோதுமை மா மக்கள் உபயோகத்துக்கு உதவாதவாறு பழுதடைந்த நிலையில் திருக்கோணமலை உணவுக் களஞ்சியத்தில் உள்ளது.

இதைத் துறைமுகக் கூட்டுத்தாபன அதிபர் திரு. ரி. பி. திஸநாயக்கா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இந்த 32,000 மூடை மாவும் கடந்த 3 வருடங்களாக களஞ்சியத்தில் அடைபட்டுக்கிடப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் சம்பந்தமாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக திரு. திஸநாயகா தெரிவித்துள்ளார்

## இவரை மோதிய லொறி எங்கே?

முல்லைத்தீவு, புதன்

மடுரோட்டிலிருந்துகிழக்கு நோக்கிச் செல்லும் வீதியால் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் லொறி ஒன்றினால் மோதுண்டுமுருங்கன் அரசாங்க மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராமலிங்கம் செல்லாச்சி (வயது 53) என்பரை மோதிய லொறி அவ்விடத்தில் நிற்காமல் ஓடி மறைந்துவிட்டதாம். பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

இக்கருத்தரங்கை பொதுஜன நூலகப் புத்தகக் குழு ஏற்பாடு செய்துள்ளது ஆங்கில தமிழ் சஞ்சிகைகளைப் பற்றி பரவலாக அறிந்து கொள்வதற்கும் வாசகர்கள் பங்குபற்றித் தரமான சஞ்சிகைகளை நூலக வாசிகசாலைக்குத் தெரிவு செய்யயும் இக்கருத்தரங்கம் வழிசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

கருத்தரங்கிற்கு வருகை தருகின்ற வாசகர்கள் நூலக விசரத்திரட்டில் இல்லாத ஒன்று அல்லது இரண்டு சஞ்சிகைகளைத் தெரிவு செய்து அவைபற்றி தனித்தனி மூன்று நிமிடத்துக்கு கூடாமல் பேசி விளக்கந்தரும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

## 'தபால் நிலையம் உடன் தேவை'

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிழக்குப் பகுதிக்கு ஓர் உபதபால் கந்தோர் உடன் வேண்டியதன் அவசியத்தை விளக்கி சுழிபுரம் கிழக்கு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர். தபாற் கந்தோர் திறக்க வேண்டும் என்பது சம்பந்தமாக சுழிபுரம்கிராம சபை மாதாந்தக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பொலிசாரிடம் திருட்டு

மன்னார், புதன்

புகைவண்டியிற் பிரயாணஞ் செய்த பொலிசார் ஒருவர் தனது உத்தியோக உடைகளையும் பெட்டியையும் பறிகொடுத்துள்ளார். தலைமன்னார்-கொழும்புவண்டியில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த குறிப்பிட்ட பொலிஸ்காரர் மலசலகூடம் சென்று திரும்புவதற்கிடையில் களவு நடந்துள்ளது. இதுபற்றி புலன் விசாரணைகள் நடைபெறுகின்றன.

6½ ஹோஸ்பவர் தொடக்கம் 20 ஹோஸ்பவர் வரையுமுள்ள
ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்
பேக்கின் B 3 மரீன் இன்ஜின் உதிரிப்பாகங்களும்
எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்
மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# விஷ்ணுஹாட் வெயார்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம்வீதி (போன்: 34) வல்வெட்டித்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பலோ-14 சந்திர பயணம் மீண்டும் தாமதம்!

வாஷிங்டன், ஜூலை 1

**அமெரிக்காவின் அப்பலோ-14 சந்திரப் பயணம் இரண்டாம் தடவையாக மீண்டும் தாமதப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருந்த அப்பலோ-14 சந்திரப் பயணம் அடுத்த வருடம் ஜனவரி 31-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

ஏப்ரல் 13-ம் திகதி மேற்கொள்ளப்பட்ட சந்திரப்பயணம் கலத்தில் ஏற்பட்ட கோளாறுகாரணமாக இயக்கம் பாதிக்கப்பட்டு விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக கலத்தைப் பூமிக்கு மீண்டும் திருப்பினுர்கள்.

அப்பலோ-14 தாய்க்கலத்திலும், சேய்க்கலத்திலும் விரிவான மாற்றங்கள் செய்தபின்னர் ஜனவரி 31-ல் பயணத்தை ஆரம்பிப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலைய அதிபர் திரு. தோமஸ் ஸ்பெயின் தெரிவிக்கிருர்.

ஜனவரி 31-ல் புறப்படவிருக்கும் அப்பலோ 14-சந்திரப்பயணத்தின் ஏற்பாடுகள் குறித்து திரு தோமஸ் ஸ்பெயின் தகவல்களை வெளியிட்டார் விண்வெளிப் பயணத்தின் அனுபவம் வாய்ந்த வீரர் அலென் செப்பேர்ட் தலைமையில் நடக்கும் இந்த அப்பலோ-14 விண்வெளி யாத்திரையில் முன்னர் செய்யப்படாத பல புதிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## கொழும்புத்திட்ட வளர்ச்சி: பிரிட்டனின் பங்கு

லண்டன். ஜூலை 1

பொருளாதார கூட்டுறவு அபிவிருத்தியை இலட்சியமாகக்கொண்டகொழும்புத் திட்டம் இனறு தனது 19வது வருட ஆண்டு விழாவைக் கொண்டாடியது. பரஸ்பர ஒத்துழைப்பிற்கும், கூட்டுறவிற்கும் முக்கியத்துவம் அளித்து இந்தப் பத்தொன்பது வருட காலத்தில் இத்திட்டம் ஒரு புதிய பொருளாதார யுகத்திற்கும் அதேவேளைமனிதசகோதரத்துளமெனும் புதிய கோட்பாட்டிற்கும் அத்திவாரம் இட்டுள்ளது.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரப் பிரச்னைக்கு தீர்வுகாணும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இப்பொழுது மொத்தம் 24 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இவற்றில் 18 நாடுகள் தெற்கு. தென்கிழக்காகிய பிராந்தியத்தைச் சேர்ந்தவை மற்றவை உதவி நல்கும் நேசநாடுகளாகும்.

பொருளாதார உதவி மூலமும், தொழில்நுட்ப உதவி மூலமும் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பசில் கொழும்புத் திட்டமானது அளப்பரிய சேவையாற்றிவருகிறது. பிரதான உதவி வழங்கும் அங்கத்துவ நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியன கொழும்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மொத்தம் 2749 கோடி டாலர்கள் வரைஉதவி வழங்கியுள்ளன என்பது குறிப்பிடப்பட்டது.

## வரவேற்றர்

மாஸ்கோ, ஜூலை 1

சோவியத்அமைச்சரவைத் தலைவர் அலக்ஸி கொஸிசின் வாஷிங்டன் மேயர் வால்டர் வாஷிங்டனை கிரெம்ளினில் வரவேற்றர். இருவரும் நேச பூர்வமான சூழலில் சம்பாஷித்தனர் என்று இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாஸ்கோ நகர சோவியத்தின் அழைப்பின் பேரில் வாஷிங்டன் மேயர் மாஸ்கோவில் தங்கியிருக்கிறர்.

இந்தச் சந்திப்பில் மாஸ்கோநகர மேயர் விளடிமீர் புரமிஸ்லோவும், மாஸ்கேவிலுள்ள ஐக்கிய அமெரிக்க ஸ்தானிகர் ஜகப் பீமும் கலந்துகொண்டனர்.

## லண்டன் வைரக்கல்

பம்பாய், ஜூலை 2

இங்கிலாந்து, நாட்டில் உள்ள லண்டனிலிருந்து ஒரு 'பார்ஸல்' பம்பாய் விமான நிலையத்துக்கு வந்தது. அந்த 'பார்ஸ'லுக்குள் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான வைரக்கற்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இரவு 3-20 மணிக்கு வந்த அந்த பார்ஸல் பம்பாய் விமான நிலையத்தில் உள்ள த்பால் இலாகா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. காலை 8மணிக்கு அந்தப் பார்ஸலை அதிகாரிகள் உடைத்துப் பார்த்தபோது வைரக்கற்கள் ஒன்றும்கூட அதற்குள்இல்லை. இதுபற்றி பம்பாய்பொலிஸார் தீவிரபுலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## 'ஆலய பரிபாலனத்துக்கு தனி அமைச்சு வேண்டும்'

உடுப்பிட்டி. புதன்

'இக்கல்லூரியைப் தரமுயர்த்தி வடமராட்சி சிறுபான்மைச் சமூக மக்களின் கல்விக்குக் கேந்திரஸ்தானமாக்கித் தருவேன் என்று உறுதியளிக்கிறேன்' என நியமன எம்.பி திரு. எம் ஸி. சுப்பிரமணியம் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. ஆ. டே. போல் தலைமையில் இவ் வரவேற்பு நடைபெற்றது திரு எம. ஸி. சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் 'எமது சமூகத்தவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் பாடசாலை இன்று இக்கல்லூரியாக விளங்குவதுபெருமைப்படத் தக்கது. சிறுபான்மைச் சமூகப் பெரியார்கள் பலதரப்பட்ட இன்னல்களையும் சமாளித்துஉருவாக்கிய இக்கல்லூரி அவர்களது ஆசையை வீணுக்கவில்லை. எமக்கென இத்தகையகல்விஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டதால்தான் நாம் கல்வியினுல் முன்னேற முடிந்தது' என்றர்.

கல்லூரி அதிபர் திரு. எம் எஸ், சீனித்தம்பி, பேசுகையில் கூறியதாவது:-

'சமூகக் குறைபாடுகளைச் சட்டம், மனமாற்றம்மூலம் தான் போக்கமுடியும். இதற்கானசட்டத்தைக் கொண்டுவரும் வாய்ப்பு 'எம் ஸி.'க்குக் கிடைத்திருக்கிறது. எமது சமூகம் ஓர் அரசியல் சக்தியாக சென்றதேர்தலில் பயன்படுத்தப்பட்டது. பெரும்பான்மையான தொகுதிகளில் யார் வெல்லுவது என்பதை நிர்ணயிப்பதுசிறுபான்மைச்சமூகவாக்குகள்தான்.

வருமானம் கூடியகோவில்களை அரசாங்கம் பொறுப்பேற்றுநடத்துவதின் மூலமே ஆலயப்பிரவேசம் சுமுகமாக நிறைவேறும். அறநிலையப் பாதுகாப்பு அமைச்சு நிறுவி அதன்கீழ் கோவில்களைக் கொண்டுவந்தால் ஆலயப் பிரவேசம்தீண்டாமைஎன்ற பேச்சே இராது'.

திரு. ஆர். எஸ். செல்லத்துரை ஆசிரியர் நன்றியுரை கூறினர்.

## இ.பாக்.60 ஆயிரம்அகதிகள்!

### பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டனர்

கல்கத்தா ஜூலை 1

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இப்போதும் இடம்பெயர்ந்து வந்த அறுபதினுயிரம் மக்கள் மேற்கு வங்காளத்திலிருந்து பல்வேறு ராஜ்யங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

மறுவாழ்வு முகாம்களு கு குடும்பம் குடும்பமாக இவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். முந்நூறு, முந்நூறுபேராக இவர்கள் அனுப்பப்பட்டனர்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இப்போதும் இடம்பெயர்ந்துவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பதினுலாயிரம் மக்கள் இப்போது வந்திருப்பதாகவும் இவர்கள் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப் படுவார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

## பட்டப் படிப்பு தெலுங்கில்

திருவாங்கூர், ஜூலை 1

ஆந்திரப்பிரதேச சட்டசபைபட்டப்படிப்பை தெலுங்கில் பயிற்றுவிப்பதென்பதை கொள்கையளவில்ஏற்றுக்கொண்டுள்ளது.

## பத்திரிகையாளர் வெளியேற்றம்

மாஸ்கோ, ஜூலை 1

அமெரிகக கொலம்பியா வானெலி. தொலைககாட்சி கம்பெனியின் நிருபர் வில்லியம் கோலே அயல்நாட்டுப் பத்திரிகையாளர்ஒருவருககு ஒவ்வாத நடவடிககைகளில் ஈடுபட்டமைகாக சோவியத் யூனியலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளசாக இங்கு அறிவிககப்பட்டுள்ளது.

## இசையோடு விஞ்ஞானபாடம்

ரங்கூன், ஜூலை 1

ரங்கூனில் துணை நகரான தென்ஒக்கல் பாவிலுள்ள ஓர் ஆசிரியர் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதற்கு இசையைப் பயன்படுத்துகிருர்.

பல்வேறு விஞ்ஞான விவரங்களைப் பாட்டாக்கி, மாணவர் எளிதில் அவற்றை மனப்பாடம் செய் யும் வகையில், இசையோடு கலந்து பாடச் செய்கின்றனர்

ஒலிநாடாவில் பதியப்பட்டுள்ள இந்த அறிவியல் இசையில் பர்மியக் கொட்டுக்கள், குழல்கள். மற்றும் பிற இசைக் கருவிகள் மீட்கப்படுகின்றன.

ஊதான்சோ என்னும் விஞ்ஞான ஆசிரியர் இந்த முறையைக் கண்டு பிடித்துள்ளார்.

## சென்னையில் டெலிவிஷன் நிலையம்

சென்னை, ஜூலை 1

சென்னையில் ஒரு கோடி ரூபாசெலவில் 'டெலிவிஷன்' நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'டெலிவிஷன்' நிலையம் இரண்டு ஆண்டுக்குள் கட்டி

## "'55 வயதில் ஓய்வு: ஆசிரியர்களைப் பாதிக்கும்"

யாழ்ப்பாணம், வியாழன்

'55 வயதில் கட்டாய ஓய்வு பெறவேண்டுமென்ற விதி, ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கும். ஆசிரியத் தொழிலில் பதவி உயர்வு குறைவு. இதனுல் உச்சச் சம்பளத்தை அடைவது மிகக் கடினம். இதனுல் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே பாதிக்கப்படுவர்'.

இவ்வாறு அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையில் தலைவர் திரு இ. கந்தையா கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்று இலங்கையில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சோஷலிச சமுதாய வாழ்க்கையை அமைத்து முற்போக்கான அரசியலை நடத்த முன்வந்திருக்கும் [illegible] மக்கள் அரசாங்கத்தை வரவேற்கின்றேம். ஆசிரியர்கள் விஷயத்தில் அரசாங்கம் எடுக்கும் நல்லதையும் நீதியானவற்றையும் நாங்கள் வரவேற்கின்றேம்.

மட்டக்களப்பு தமிழ் ஆசிரிய சங்க காரியதரிசி திரு. கே.வனசிங்கா பேசுகையில், 'ஆசிரியத் தொழிலில் எவ்வளவு காலம் சேவை செய்கின்றேமோ அதில்தான் உயர்வு தங்கியுளளது. ஆகவே இப்படியாக உயர்வு பெற்ற ஆசிரியர்களை, 55 வயதில் கட்டாய ஓய்வு என்ற திட்டத்தால் இழப்பது நாட்டுக்கு உகந்ததல்ல. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இப்படி ஓய்வில் அனுப்புவது கல்வியைச் சீர்கெடச் செய்வதற்கு வழியாகும்' என்ருர்.

திருவாளர்கள் பொ. குமாரசாமி, ஆ.க. மாணிக்கம், நா. கணபதிப்பிள்ளை, த. இராசேந்திரம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## வரவேற்றர்

மாஸ்கோ, ஜூலை 1

சோவியத் உதவி அயல் நாட்டு அமைச்சர் நிககலாய் பிரியுமின் கம்போடியதேசிய ஐக்கிய முன்னணி மத்திய கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினரும், கம்போடிய தேசிய ஐககிய ருேயல் அரசாங்கத்தின் பொருளாதார நிதி அமைச்சருமான தியோன்மும்மை வரவேற்ருர்.

## கல்வியும் விளையாட்டும்

கோப்பாய் சனி

தற்கால மாணவர்களே வருங்காலத்தில் இந்நாட்டுத்தலைவர்கள். எனவே அவர்கள் முன்னேற்றங்களில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துதல் அவசியம்என கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிர

## ஸ்ரீமாவோவை மகாசபை குழு பேட்டி காணும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமூக சேவைப் பகுதி

## சிங்களத்தில் கடமை ஆற்ற வேண்டும்!

— அமைச்சர் தென்னக்கூன்

கோட்டை புதன்

'சமூக சேவைப்பகுதி பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ஒருபகுதியாக இருப்பதால் நூற்றுக்கு நூறுவீதம் சிங்களத்திலேயே அப்பகுதி ஊழியர்கள் கடமையாற்ற வேண்டும். அப்படிச்சிங்களத்தில் கடமையாற்ற முடியாத ஊழியர்கள் வேறு இலாகாக்களுக்கு மாற்றப் படுவார்கள்' என்று சமூக சேவைப் பகுதி அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் தெரிவித்தார்.

ஜூலை 1ந் திகதியிலிருந்து சிங்களத்திலேயே சமூக சேவை அமைச்சின்கீழுள்ள இலாகாக்கள் கடமையாற்றுவதற்கான உத்தரவை அமைச்சர் பிறப்பித்துள்ளார்.

சமூக சேவை' அமைச்சின் கீழுள்ள பாடசாலைகள் இதுவரை காலமும் ஆங்கிலத்தில் இயங்கிவந்திருக்கின்றனவென்றும் இனிச் சிங்களத்திலேயே இயங்குமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எழுத்துக்கு எழுத்து சொல்லுக்குச் சொல்லு சிங்களத்திலேயே ஊழியர்கள் கடமையாற்ற வேண்டும் என்பது அமைச்சின் உத்தரவு

## 'அதிபர் பதவி நியமனங்களை புனராலோசனை செய்க'

### பண்டித பட்டதாரிகள் சங்கம் மகஜர்

## இரு மொழிகளுக்கும் கனடாவில் சமஅந்தஸ்து

ஒட்டவா, ஜூலை 1

ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் கனடாவின் அரசகரும

## வாழ்த்து

மாஸ்கோ, ஜூலை 1

கொங்கோ ஜனநாயகக்

# இரு மொழிகளுக்கும் கனடாவில் சமஅந்தஸ்து

ஒட்டவா, ஜூலை 1

ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் கனடாவின் அரசகரும மொழிகளாகவுள்ளன. கனடாவின் அரசகரும மொழிச் சட்டத்தின்படி ஆட்சிமன்றத்திலும் மற்றும அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இவ்விரு மொழிகளும் சமஅந்தஸ்துடன் விளங்குகின்றன. எங்கும் இருமொழிகளுக்கும் சமஉரிமைகிடைக்கிறது

கனடாவின் அரசகரும மொழிச்சட்டத்தின்படி பொதுமக்களின் கவனத்திற்கு எழுத்துமூலம் கொண்டுவரப்படவேண்டிய சகலவும் அரசாங்கத்தின் உத்தரவுடனே இருமொழிகளிலும் வெளியிடலாம்'

மேலும் சமஷ்டிநீதிமன்றங்களிலெல்லாம் தீர்மானங்கள், விசாரணைகள், நீதிவழங்கல், வழக்குப் பதிவுகள் ஆகியனவும், அறிவித்தல்கள் விளம்பரங்கள் ஆகியனவும் இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன.

## வாழ்த்து

மாஸ்கோ, ஜூலை 1

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் 10-வது சுதந்திர தினத்தையொட்டி சோவியத் தொழிற் சங்கங்களின் அகில யூனியன் மத்திய கவுன்சில் கொங்கோ உழைக்கும் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் நல்வாழ்த்துக்களை அனுப்பியுள்ளது

— —

## லெனின் நூற்றுண்டு கண்காட்சி

கோட்டை, புதன்

வி. ஐ. லெனின் நூற்றுண்டு ஜெயந்தி விழா 29-ம் திகதி காலியில் புத்தக, சஞ்சிகை கண்காட்சி ஒன்று ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கண்காட்சியை மக்கள்பதிப்பகம் லங்கா-சோவியத் நட்புறவுக் கழகத்தினதும், மெஷ்னிகாவினதும் உதவியுடன் நடத்துகிறது

சென்னை, ஜூலை 1

சென்னையில் ஒரு கோடி ரூபாசெலவில் 'டெலிவிஷன்' நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'டெலிவிஷன்' நிலையம் இரண்டு ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் வரவு-செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கி உள்ளது.

'டெலிவிஷன்' நிலையம் அமைக்க சென்னை மவுண்ட் அரசாங்க தோட்டத்தில் 4 ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுக்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது

— —

## நக்ஸல்பாரி தலைவர் தலைமறைவு

சென்னை, ஜூலை 1

சிராஜுத்தீன் என்ற நக்ஸல்பாரி தலைவர் ஜெயிலிலிருந்து காவலுடன் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்படுகையில் தப்பியோடிவிட்டார். பொலிஸார் அவரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

...ம் மக்கள் அரசாங்கத்தை வரவேற்கின்றோம்.

# ஸ்ரீமாவோவை மகாசபை குழு பேட்டி காணும்!

யாழ்ப்பாணம், வியாழன்

சமூக ஒழிப்புக்குறைபாடுகள் சட்டத்திலுள்ள சில குறைபாடுகளை நீக்கி திருத்தம் செய்து சிறுபான்மைத் தமிழர்களும் இந்நாட்டில் சகல உரிமைகளையும்பெற்று சுதந்திரமாக வாழவழி செய்யும் முகமாக அச்சட்டத்தை வலுப்படுத்திவிரைவில் பூரணமாக அமுல்நடாத்துவதற்கு பிரதமரை வற்புறுத்த அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்குழுவொன்று வருகிற 4-ம் திகதி பிரதமர் ஸ்ரீமாவோவை பேட்டிகாணவிருக்கிறது.

மகாசபைத் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எம். ஸி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற காரியக்கமிட்டிக் கூட்டத்தில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

குடியிருப்பதற்கு காணியற்ற சிறுபான்மைத் தமிழருக்கு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இக்குழு பிரதமரைக் கேட்கவிருக்கின்றது.

''சிறுபான்மைத்தமிழருள் படித்தவாலிபர்கள் உத்தியோகமின்றி அதிகமானோர் இருக்கின்றனர். இவர்களுக்கு விசேஷ சலுகை வழங்க வேண்டும் என்று கல்வி மந்திரியிடம் இக்குழு வற்புறுத்தும்:

வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த-தமிழ் பாடசாலைகளில் வேதனம் இன்றி கடமையாற்றும் ஆசிரியர்களின் நியமனம் சம்பந்தமாகவும் இக்குழு கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் எனத் தெரிகிறது.

மாவிட்டபுரம் கோவில் சம்பந்தமான சில விஷயங்கள் பற்றி பிரதமருடன் இக்குழுகலந்தாலோசிக்கவிருக்கிறது.

நியமன எம். பி. தலைமையில் செல்லும் இக்குழுவில் மகாசபை உபதலைவர்கள் திரு. மாட்டின் செல்லையா, திரு. எஸ் கே துரைசிங்கம், நிர்வாகக்காரியதரிசி திரு எஸ். செல்லையா, பொதுக் காரியதரிசி பி. ஜே. அன்ரனி உட்படபத்துபேர் இக்குழுவில் இடம் பெறுவர்.

## 'கண்ணாடித் தொழிற்சாலை நிறுவப்படும்'

எம். ஸி.

''அரசாங்க உதவியுடன் விரைவில் வல்லிபுரக் கோவிலில் கண்ணாடித் தொழிற்சாலையை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகின்றேன். பனம் பொருள் ஆராய்ச்சிக் கூட்டுத்தாபனம் ஒன்றும் வடபகுதியில் நிறுவப்படும். அத்துடன் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் நிலப்பிரச்னையைத் தீர்த்துவைக்க அரசாங்கம் மூலம் சட்டங்களைக்கொண்டு வருவேன்.''

இவ்வாறு துன்னாலைதெற்கு நுணுவில் வயல் வெளியில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை வடமராட்சிக் கிளை அளித்த வரவேற்பில் பேசுகையில் நியமன எம். பி. திரு. எம். ஸி சுப்பிரமணியம் உறுதி அளித்தார்.

இக்கூட்டம் ஆசிரியர் திரு மு. செல்லப்பாக்கியம் தலைமையில் நடைபெற்றது சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகசபைக் காரியதரிசி திரு. சி. செல்லையா பேசும்போது, ''எம். ஸி சிறுபான்மைச் சமூகத்தவருக்கு மட்டும் பிரதிநிதி அல்ல. இந்நாட்டுத் தமிழர்கள் அனைவருக்கும் அவர் பொதுப் பிரதிநிதி. முற்போக்கு சோஸலிஷ எண்ணம் கொண்டவர்களாலேயே இதுமுடியும்'' என்று குறிப்பிட்டார்.

தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி உட்பட வேறுபலரும் பேசினர்.

...பலர் உரையாற்றினர்.

...தலைவர்கள். ...

அவர்கள் முன்னேற்றங்களில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துதல் அவசியம்என கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் யாழ். அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி திரு: ஆர், அருள் பிரகாசம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. இ. கே. சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர்

திரு. அருள்பிரகாசம் மேலும் பேசுகையில், கல்வியுடன் விளையாட்டுத்துறை முக்கியமாகும் தேகாரோக்கியம் அற்ற கல்விபயன் அற்றது. விளையாட்டுத்துறை மூலம் மாணவ மத்தியில் சிநேகமனப் பான்மை, கட்டுப்பாடு, கல்வியறிவு முதலியனவளர இடமுண்டு என்றார்.

— —

## 'நாட்டுப்பற்று வேண்டும்'

பொகவந்தலாவ, புதன்

'நாடு நமது வீட்டைப் போன்றது. நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நமது வீட்டுக்கு ஏற்பட்டுள்ளது போன்றது, நாட்டுப்பற்று இருந்தால்தான் நாமும் முன்னேற முடியும். எனவே நாட்டைக்காக்கும் நிதிக்கு நம்மால் இயன்ற உதவியை செய்ய வேண்டும்' என பொகவந்தலாவ சென். மேரிஸ் வித்தியாலய அதிபர் திரு. ஏ. ஆர் சுப்பிரமணியம் அப்பாடசாலையின் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலையில் கடமைபுரியும் ஆசிரியர்கள் தங்களது ஒருநாள் சம்பளத்தை நாட்டைக்காக்கும் நிதிக்குக் கொடுக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்ததைத்தொடர்ந்து ஆசிரியர்கள் தங்களது ஒருநாள் சம்பளத்தை நாடுகாக்கும் நிதிக்குக் கொடுக்க முன்வந்துள்ளனர்

— —

## தற்கொலை முயற்சி வழக்கு

பருத்தித்துறை, புதன்

தற்கொலை செய்ய முயற்சித்ததாக உடுப்பிட்டியைச் சேர்ந்த மு. கதிரவேலு என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

# 'அதிபர் பதவி நியமனங்களை புனராலோசனை செய்க'

## பண்டித பட்டதாரிகள் சங்கம் மகஜர்

பருத்தித்துறை, புதன்

''தமிழ்ப் பண்டிதர்களும் சிங்கள பிராசீனப் பண்டிதர்களும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குச் சமமானவரென பண்டாரநாயக்கா அரசாங்கம் கொள்கையளவில்ஏற்றுக்கொண்ட பின்னரும், கடந்த அரசாங்கம் இரண்டாந்தர அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற தமிழ் பண்டிதர்களை அப்பதவிகளுக்கு நியமிக்கமறுத்தது. பின்னர் ஏதோ கண்துடைப்பு வேலையாக அவர்களை இரண்டாவது தடவை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததெனினும் அவர்களில் ஒருவருக்காவது இரண்டாம்தர அதிபர் பதவி வழங்கவில்லை ஆனால் அதே நேரத்தில் சாதாரண பயிற்றப்பட்ட சேவைக்காலம் குறைந்த ஆசிரியருக்கு அப்பதவிகளை வழங்கியது''.

இவ்வாறு அகிலஇலங்கைத் தமிழ்ப்பண்டித பட்டதாரிகள் சங்கச் செயலாளர் திரு. குக. வைரவனார் கல்வியமைச்சர் திரு பதியுத்தீன் மகமூத்துக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்

இந்நியமனங்களைப் புனராலோசனை செய்யுமாறு கூறும் மகஜரில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமது சங்கம் முன்னாள் கல்வியமைச்சரைப் பேட்டிகாண எடுத்த முயற்சிகளையும் அது கைகூடாமையையும் விளக்கி புதிய அமைச்சரிடம் தங்கள் சங்கம் தமிழ்ப்பண்டிதரின் கோரிக்கைகளை முன்வைத்துப் பேட்டிகாண ஒரு சந்தர்ப்பம் அளிக்குமாறும் அமைச்சரைக் கேட்டுள்ளது.

......

## இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம்

மட்டுவில், புதன்

நாட்டைக்காக்கும்நிதிக்கு ஒருநாட் சம்பளத்தைக் வழங்குவதென இருமுறைபயிற்றப்பட்ட ஆசிரியர்சங்கம் முடிவு செய்துள்ளது.

மலாயா கபே மேல்மாடியில் இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் திரு. ரி. பரமானந்தம் தலைமையில்அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டபோது இம்முடிவு எடுக்கப்பட்டது.

## சோஷலிச சமுதாயத்தைப் படைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், வியா.

''உதவி ஆசிரியர்கள்புதிய கல்வித்திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் முன்னோடியாக நின்று நம்சிறார்களின் கல்வி வளர்ச்சியில் கவனஞ் செலுத்த வேண்டும். இலங்கையின் இளஞ் சமுதாயம் ஜனநாயக சோஷலிசத்தையே விரும்புகிறது இச் சமுதாய அமைப்பு சீர்பெற உதவி ஆசிரியர்கள் துணைபுரியவேண்டும்''

இவ்வாறு அகில இலங்கை உதவியாசிரியர் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசும்பொழுது திரு. கு.செல்லத்துரை கூறினார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

o அகில இலங்கைக்கும் பொதுவான நிரந்தரமான ஆசிரிய இடமாற்றத் திட்டமொன்று உருவாக்கப்படும்வரை ஒரு தொகுதிக்கென அமையும் கிளிநொச்சி மாற்றத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாமென்று கௌரவ கல்விஅமைச்சரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

o சமவேலைக்கு சமசம்பளம் என்ற திட்டத்தை மிகவிரைவில் அமுலுக்குக கொண்டுவரும்படி அமைச்சரைக் கேட்டுக்கொள்வது:

o ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறித்து கல்வி மந்திரியை பேட்டி காண்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

o வடக்குக், கிழக்கு, தெற்கு ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகங்களை மிகவிரைவில் அமைக்குமாறு கல்வி அமைச்சரையும் பிரதமமந்திரியையும் இச்சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

— —

## உரும்பராயில் கதிர்காம உற்சவம்

உரும்பராய், புதன்

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயிலில் கதிர்காம உற்சவம் இம்மாதம்4-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. கர்ப்பூரத்திருவிழா 14-ம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தோற்சவம் 20-ம்திகதியும் நிகழும்,

# அரபுக்கு சோவியத் உதவி தொடர்ந்து கிடைக்கும்!

## நாஸருக்கு பொட்கோர்ணி உறுதி

மாஸ்கோ, ஜூலை. 1

மேற்காசிய நிலைமையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகள் குறித்து மாஸ்கோவில் தற்போது தங்கியிருக்கும் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி அப்துல் நாஸர் சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துகிறார்.

அரபுக் குடியரசுக்குத் தேவையான உதவிகளை அளிப்பதற்கு சோவியத் யூனியன் மீண்டும் உறுதியளித்துள்ளது.

நேற்றிரவு மாஸ்கோவில் அரபுக் குடியரசு ஜனாதிபதிக்கும், அவருடன் கூட வந்தவர்களுக்கும் அளிக்கப்பட்ட இரவுப்போசன விருந்தில் உரையாற்றிய திரு. பொட்கோர்னி பேசுகையில், அரபுக்குடியரசின் பாதுகாப்புக்கு சகல உதவிகளையும் சோவியத் என்றும் வழங்குமென நாஸருக்கு உறுதி தெரிவித்தார்

## இஸ்வெஸ்தியா பாராட்டு

ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி நாஸரின் சோவியத் விஜயத்தை இரு நாடுகளுக்கிடையிலான வளர்ந்துவரும் நட்புறவினதும், ஒத்துழைப்பினதும் மகத்தான வெளிப்பாடாக சோவியத் உத்தியோக பூர்வமான பத்திரிகை 'இஸ்வெஸ்தியா' வர்ணித்துள்ளது.

# வயதான நடிகர்களுக்கு பணஉதவி! - தமிழகமுதல்வர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 1

வயதான நடிகர்களுக்கு பண உதவி அளிக்கும் பொருட்டு தமிழக முதல் அமைச்சரால் ''கருணாநிதி அறக்கட்டளை'' (டிரஸ்ட்) அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கடற்கரையில் அண்ணா சமாதிக்கு எதிரில் உள்ள 'பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில், நடைபெற்ற விழாவில் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

இவ்விழா வெளிநாடுகளுக்கு செல்லும்திரு மு கருணாநிதிக்கு வழியனுப்பு விழா தென் இந்திய சினிமா வர்த்தக சங்கத்தின் சார்பில் நடைபெற்றது:

இந்தவிழாவில் திரு. மு. கருணாநிதியிடம் ''கருணாநிதி அறக்கட்டளை'' அமைப்பதற்காக ரூ. 1 லட்சம் நிதி வழங்கப்பட்டது: இப்பணத்தை, சினிமா அதிபர்கள், நடிக நடிகைகள், டைரக்டர்கள் மற்றும் கலைஞர்கள் சேர்ந்து கொடுத்தார்கள்.

வயதான கலைஞர்களுக்கும் வயதான நடிகர் நடிகைகளுக்கும் உதவி செய்வதற்காக இக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது என்றும். இந்த 'அறக்கட்டளை'க்கு படத்தயாரிப்பாளர்கள் ஒவ்வொரு படம் வெளியாகும் போதும் ரூ. 5 ஆயிரம் கொடுக்கவேண்டும் என்றும் திரு. கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

## மாடிவீடு இடிந்து 7 பேர் பலி

ஜெய்ப்பூர், ஜூலை 1

ஒரு மாடி வீடு இடிந்து விழுந்ததால் 7 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 100 பேர் பலத்த காயத்திற்குள்ளாயினர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பாலி மாவட்டத்தில் பூச்சி என்ற கிராமத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஒரு விழாவுக்கு ஏராளமான மக்கள் மாடி வீட்டில் கூடியிருந்ததாகவும் அப்போது வீடு இடிந்துவீழ்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நம்பிக்கை மூலம்தான் தெய்வத்தை நோக்கி ஒருவர் முன்னேற முடியும் தெய்வத்தின் எல்லையற்ற அன்பிலும் கருணையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை வையுங்கள், நமது குற்றங்களையெல்லாம் மன்னிக்கவும் அவர் காத்திருக்கிறார். அவரிடம் மனதைத் திறந்து, உங்கள் பல வினங்களையெல்லாம் சொல்லுங்கள், அவர் தமது அருளைச் சொரிந்து உங்களைக் கைதூக்கி ஆட்கொள்ளுகிறார்

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 18-ந்திகதி (2-7-70)


## பல்கலைக்கழகப் படிப்பு

பல்கலைக்கழகங்களின் போதனுமொழி சுயபாஷையாகவே அதாவது சிங்கள மொழிமூலம் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) சித்தியெய்தியவர்கள் சிங்களத்திலும் தமிழ்மூலம் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) சித்திபெற்றவர்கள் தமிழிலும் பல்கலைக்கழகக் கல்வி பெறுவார்கள் என்று கல்வி அமைச்சர் அறிவித்திருக்கிறார். அமைச்சரின் இந்த முடிவை கொழும்பிலுள்ள சில தலைமையாசிரியர்கள் நியாயமானதென்று வரவேற்றுள்ளபோதிலும் சுயபாஷை மூலம் பல்கலைக்கழக கல்வியளிப்பதனால் உயர் கல்வியின் தரம் குறையுமாதலால் அதுபற்றி கவனமாக இருக்க வேண்டுமென்றும் எச்சரித்திருக்கின்றனர். சுயபாஷை மூலம் போதனையளிப்பதால் உயர் கல்வியின் தரம் குறைந்துவிடுமென்ற கருத்து நியாயமானதெனக்கொள்ள முடியாது.

மற்றெல்லாவற்றையும் விட மாணவர் நலனே முக்கியம். நமது நாட்டில் ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பான ஜி. ஸி. ஈ. (உயர்தரம்)வரை இப்பொழுது சுயபாஷை மூலமே பிள்ளைகள் கல்வி பெற்றுவருகின்றனர். ஜி. ஸி. ஈ. வகுப்பில் ஆங்கிலத்தில் கட்டாயமாகச் சித்திபெற வேண்டுமென்ற விதியில்லை. எனவே சிங்கள மொழி மூலமும், தமிழ் மொழி மூலமும் கல்வி கற்ற மாணவர்கள்பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் எப்படி உயர் கல்விபெற முடியும்?

இந்நிலையில் சுயபாஷை...

...கொள்ளவேண்டிய பொறுப்பும் கடமையும் கல்வியமைச்சருக்கும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் பெரிதும் உண்டு.

பாடபோதனைகளைத் தவிர இதர நூல்கள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கும் பாடபோதனைக்கு வழிகாட்டியாகவுள்ள நூல்களைப் படிப்பதற்கும் பல்கலைக்கழக அதிகாரிகள் மாணவர்களுக்கு வசதி செய்துகொடுக்கவேண்டியதும் அவசியமாகும். இல்லையெனில் சுயபாஷை மூலம் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்)சித்தியெய்திய மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர்வது சிரமமாக இருக்கும் என்றே சொல்லவேண்டும்.

இதேசமயம் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆனர்ஸ் பட்டப்படிப்புப் படிக்கும் மாணவர்கள் ஆங்கிலத்தில் வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகளைப் படித்துப் பயன்பெறுவதற்கு ஆங்கிலத்திலும் கட்டாய விசேஷ பயிற்சி அளிக்கப்படவேண்டியதும் அவசியமாகும்.

இன்னொரு விஷயத்தையும் கல்வி அமைச்சரும் பல்கலைக்கழக அதிகாரிகளும்கவனத்தில்கொள்வதும் நல்லது. அதாவது பல்கலைக்கழகத்தில் ஒரு சில மாணவர்கள் இப்பொழுதும் ஆங்கில மொழிமூலம் உயர் கல்வி பெற்றுவருகின்றனர் இவர்களே ஆங்கிலமொழி மூலம் கல்விகற்று வெளியேறும் கடைசி மாணவர்களாக இருக்கக்கூடும். எனவே இப்பொழுது ஆங்கில மொழி மூலம் உயர்கல்வி பெறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு...

# கூட்டுறவுக் கல்வி

## மனிதவளத்தை உருவாக்குவதே நோக்கமாயிருக்கவேண்டும்


க. பரமோதயன்

அதிபர், கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம்


எந்தவோர் இயக்கத்லும் உதாசீனத்தையும், போலி இறுமாப்பையும் எதிர்த்துப் போராட வேண்டியிருப்பது இயல்புதான். ஆனால் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை அவ்வாறு செய்வதற்குச் சிறப்பான காரணங்களுண்டு. என்றாலும் ஒரு சிறந்த கூட்டுறவுக் கல்வி முறையைக் கட்டி எழுப்புவதற்கு வேண்டிய அடித்தளங்கள் இலங்கையில் இருப்பது எழுச்சியூட்டவல்லது. அதாவது. அதிக தேவை, பரந்த எழுத்தறிவு, கூட்டு மனப்பான்மைக்குரிய சில மரபுகள், ஊக்கம் கெடுக்கும் முட்டுக்கட்டைகள் இருந்தபோதிலும் மேற்கூறிய அடித்தளங்களைப் பயன்படுத்திக் கூட்டுறவுக் கல்வியைக்கட்டியெழுப்பவேண்டியிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை கூட்டுறவுக் கல்வி இறுமாப்பென்னும் அமைதியான சோலைக்குள் நீண்டகாலமாக உறங்கிவிட்டது உண்மையே. ஆனால் அதற்கும் வெளியே உலவவேண்டிய காலம் வந்துவிட்டது சதுப்புகளும், புதர்களும் நிறைந்த நெடுந்தூரம் கூட்டுறவுக் கல்வியை எதிர்நோக்கியுள்ளது. பிரயாணம் கடினமானபோதிலும் குறிக்கோள் மேன்மையானது.

கூட்டுறவுக் கல்வி அங்கத்துவக் கல்வியையும் பணியாளருக்குரிய பன்முகக் கல்வியையும் ஒருங்கே அடக்கியுள்ளது. அந்தந்த தேவைக்குரிய சிறப்புத் தேர்ச்சியை அளிப்பதன் மூலம் பெரும் சமுதாயத்துடன் பொறுப்புள்ள முறையில் இணைந்து செல்லக்கூடிய...

...கும். 1965ல் அகில உலகத் தொழில் தாபனத்தால் வெளியிட்ப்பட்ட 'கூட்டுறவு முகாமையும் நிருவாகமும்' என்ற நூலில் இக்குறைபாடு நன்றாக ஆராயப்பட்டது. அந்நூலிலுள்ள பின்வரும் கருத்துக் குறிப்பிடத்தக்கது: 'கூட்டுறவுத் தாபனம் முதற்கண் சமுதாய நோக்குடன் செயற்பட்டபோதிலும் ஏனைய பொருளாதார முயற்சிகளைப் போன்று அதுவும் பருமன், அமைப்பு, முகாமை இயந்திர சாதனங்கள் போன்றவற்றைப் பொறுத்துப் பல பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியிருக்கின்றது இவ்வுண்மையினை ஓரளவு தயக்கத்துடன் தான் கூட்டுறவு இயக்கம் புரிந்துகொண்டுள்ளது. கூட்டுறவுக் கொள்கைகள் செம்மையாயிருப்பதால் முகாமைத் திறன் இன்றியே வெற்றிகரமாகச் செயற்படலாம் என்றும், முகாமைத்திறன் தனியார் இலாபத்தை அல்லது கழுத்தறுக்கும் போட்டியை மையமாகக்கொண்ட ஒரு பொருளாதார முயற்சிக்கே உகந்ததென்றும் கூட்டுறவாளர்கள் கருதுகின்றனர்போலும். இலட்சியங்கள் எவ்வளவு மேன்மையானவையாய் இருந்தபோதிலும் முகாமைக் குறைபாட்டால் பல கூட்டுறவு முயற்சிகள் தோல்வியுற்றிருப்பதற்கு நீண்டகால அனுபவம் சான்றுபகருகின்றது. எனவேதான் கூட்டுறவு இயக்கம் தொழில் நிரு[illegible] கல்விக்கு முக்கியத்[illegible]ம் அளிப்பதுடன் தேவைப்படும்போது தனியார்துறையின் உத்திகளையும் ஆராய முற்படவேண்டியிருக்கின்றது. இவ்வாறு கூட்டுறவுக் கல்வியையும், ...

...களையேனும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அன்றாட நடவடிக்கைகள், நிதிக் கட்டுப்பாடு, பொருட்கட்டுப்பாடு, ஆட்பணி நிருவாகம், அங்கத்துவ, பொது மக்கட் தொடர்புகள். நிருவாகசபை வரையறுக்கும் கோட்பாடுகளுக்கு அமைவாக முகாமையாளர் செயற்படட்போதிலும் நிருவாகத்திற்குரிய அதிகாரம் முழுவதும் முகாமையாளரிடமே ஒப்படைக்கவேண்டியது அவசியம் முகாமை என்பது ஒரு தொழில்நுட்பமாய் அமைந்தபோதிலும், ஒரு சிறந்த முகாமையாளரிடம் பலவகைப்பட்ட சாதுரியங்கள் காணப்பட வேண்டும். பரந்த நோக்கு, கூரிய அறிவு. பொறுப்புணர்ச்சி போன்ற உயரிய குணதிசயங்கள் ஒரு திறமையான முகாமையாளருக்கு இன்றியமையாதவையாகும்'' என்பவையே அக்கருத்துக்களாகும்.

மேலே ஆராயப்பட்ட கருத்துக்களுக்கமைவாகத் திறமைசால் முகாமையாளரைப் பெற்றுக் கொடுப்பதே கூட்டுறவுக் கல்வியின் உடனடிப் பணியாயமைய வேண்டும்.

அங்கத்துவக் கல்வியைப் பொறுத்தவரை அங்கத்தவர்களுக்கு அவர்களின் கடமைகள், உரிமைகள், பொறுப்புகள் ஆகியனவற்றைப் பற்றிய அறிவைப் புகட்டுவதுடன் அமையாது, வேறு துறைகளிற்கூட அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு கூட்டுறவுக் கல்விக்குண்டு. இலங்கை வாசிகளில் ஏறத்தாள 70 வீதத்தினர் பல்வகைப்பட்ட கூட்டுறவு முயற்சிகளுடன் எவ்வகையிலாவது தொடர்புகொண்டிருப்பது உண்மை. ஆகவே ஓர் உகந்த [illegible]ங்கத்...

...பிரச்னைகள் உண்டு. உழைப்பின் குறைவிளைவு குறைந்த தனியார் வருமானம், குறைந்த வாழ்க்கைத்தரம், தேசிய வருமானபங்கீட்டிலுள்ள ஏற்றத் தாழ்வுகள், கைத்தொழில் முயற்சிகள் குறைவாயிருத்தல், பெருகிச்செல்லும் குடித்தொகை வேலையில்லாமையும் தொழில்வாய்ப் பின்மையும் குறைந்தசேமிப்புப் மூலதனக்குறையும், போதியவினையான்மைத் தொழிலாளரின்மை, முயற்சிக்குரிய ஆற்றலும் திறமையும் அருமையாயிருத்தல், இவைபோன்ற பல குறைபாடுகளை நீக்கும் முயற்சி இலங்கையில் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இவை அறியாமையாலும் மக்களின் உதாசீன மனப்பான்மையாலும் ஒருபுறமும் மூடநம்பிக்கையாலும் பழக்க வழக்கங்களாலும் மறுபுறமும் வலுப்படுத்தப்பட்டு, சமுதாயத்திற்குரிய பொதுத் தன்மைகளாகப் பெரும்பாலும் அமைந்து விட்டன. இவற்றைநீக்கும் பெரும்பொறுப்பும் கூட்டுறவுக் கல்வியை எதிர் நோக்கியுள்ளது.

உற்பத்திக்கு மனித வளமே முக்கிய சாதனம் என்று நவீன பொருளியளாளர் வற்புறுத்துகின்றனர். தியடோர் சூல்ஸ் 1958ம்ஆண்டில்வெளியிட்ட 'மனித செல்வமும் பொருளாதார வளர்ச்சியும்' என்ற நூலில் பொருளாதார அபிவிருத்திக்கு மனிதனே திறவுகோல் என்று வலியுறுத்தினார். அவரைத் தொடர்ந்து மோட்டன் சேமன். எட்வேர்ட்டெலிசன், காரிபெக்கர் போன்ற பொருளியலாளர் 'மக்களே மூலதனம் என்ற புதியதொரு பொருளாதாரக் கோட்பாட்டினை வரையறுத்தனர். 'முறை...

## இன்று கூட்டுறவுத் தினம்

## ஜெயராஜன் எழுதுவது:

இம்மாதத்திலே இலங்கையிலும் தமிழகத்திலும் பல கோயில்களின் கும்பாபிஷேகம் நடப்பதாக பல பத்திரிகைகள் கிடைத்துள்ளன. காரைநகர் சிவன்கோயிலில் (ஈழத்துச்சிதம்பரம்) இம்மாதம் 4-ம் திகதி முதல் கிரியைகள் ஆரம்பித்து 10-ந் திகதி காலை மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. 20 குருக்கள்மார்கள் இதில் பங்கு பற்றுகிறார்கள். பலர் வேதாத்யானம் செய்கின்றனர். கும்பாபிஷேகத்துக்கு மட்டும் செலவு சுமார் 50 ஆயிரத்துக்கு மேலாவதாக ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்.

மந்திரங்களெல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருப்பதால் பலருக்கும் அதன் கருத்து விளங்கமுடியாது. அவ்வப்போது நடக்கும் கிரியைகளையும், மந்திரங்களின் கருத்துக்களையும் தமிழில் விளக்கினால் பயனுள்ளதாக இருக்குமென்று கூறியதற்கு, சிவஸ்ரீ க. வை ஆத்மநாதசர்மா இந்தப் பணியைச் செய்யலாமென்றும் தெரிவித்தார்.

நடக்கும் கிரியைகளின் கருத்தையும் பயனையும் மக்கள் அறியவந்தால், மெய்ப்பாட்டு உணர்ச்சியுடன் கவனமாக இவற்றைப் பின்பற்ற முடிவதாக இருக்கும். இந்த மாதிரி ஒழுங்கை எல்லா கும்பாபிஷேகங்களிலும் செய்வது நல்லது. முக்கிய மந்திரங்கள் கிரியைகள் இவற்றின் கருத்துக்களையும் தமிழில் சிறு நூலாக வெளியிடுவது பலருக்கும் பயன்படுவதாக இருக்கும்.

அர்த்தம் புரியாததால் தான் இதெல்லாம் வீண் செலவென்றும் மூட நம்பிக்கையென்றும் வாலிப உலகம் நினைக்கக்காரணமாகின்றது. பெரும்பணச் செலவில் கும்பாபிஷேகம் செய்பவர்கள் சாதாரண மக்களும் விளங்கி பயன் அடையும்படி செய்ய வேண்டுமென்றே இதை எழுதுகிறேன்.

0 0 0

அராலி வடக்கிலுள்ள ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலில் எல்லா சமூகங்களின் ஒத்துழைப்பாலும் திருப்பணி வேலைகள் முடிந்துள்ளதுடன், பக்கத்திலுள்ள அம்...

...ஓர் அன்பர் தெரிவிக்கிறார் ஏழுவருடங்களுக்குமுன் எல்லா சமூகத்தவருக்கும் வழிபாட்டுக்கென, அவ்வூர் மக்களின் சம்மதத்துடன் திறக்கப்பட்ட கோயில் இது. கோயில் பூசைகள் செவ்வனே நடந்துவருவதாகவும், இக்கோயில்பரிபாலன சபையில் எல்லாசமூகத்தவருக்கும் பிரதிநிதித்துவம் அளித்துள்ளதாகவும் தெரிகிறது.

இதனால் கோயில் காரியங்கள் நல்லபடி நடக்கப் போதிய வருமானம்கிடைக்கவும், ஊரில் மக்களிடையே ஒற்றுமையும் அன்பும் பெருகவும் கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

தமிழகத்திலே பஞ்ச பூதத்தலங்களில் ஒன்றான திருவானைக்காவல் கோயில் கும்பாபிஷேகம் இம்மாதம் 18-ந் திகதி நடக்கிறத. பெரும் செலவில் திருப்பணி நடந்துள்ள இக்கோவில் கும்பாபிஷேகத்துக்கு ஈழத்திலிருந்து பலர் செல்ல விரும்புவதாகத் தெரிகிறது: இதையொட்டி திருவையாறு, திருவிடைமருதூர் முதலிய கோயில்களிலும் கும்பாபிஷேகம் நடக்கிறதாம். தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி நடக்கிறதென்றாலும் கோயில் பூசை, கும்பாபிஷேகம் முதலியன நடந்துவருவது குறிப்பிடத்தக்கது

தமிழக முதல்வர் கருணாநிதியின் துணைவியாருக்கு தெய்வபக்தி உண்டென்றும், கோயில் குருக்கள் அர்சனை செய்து பிரசாதத்தை அமைச்சரின் வீட்டுக்குக்கொணர்ந்து ஆசீர்வாத மந்திரம்ஓதி அவரிடம் கொடுத்ததை நேரில் பார்த்த ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்.

பல ஆண்களுக்குத்தெய்வபக்தியில்லாமல் வழிபாடுகளிலும் நம்பிக்கையில்லாமல் இருந்தாலும், துணைவிமார்களாகிய மங்கையர்க்கரசிகளால், தமிழகத்தில் ஆத்திகம் வளரவும், கோயில் வழிபாடுகள் நன்கு நடைபெறவும் முடியக்கூடியதாகவுள்ளது. வாழ்க மங்கையர்க்கரசிகள்!

0 0 0

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே, படைகள் போல்வரும் பஞ்சமா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும், தமிழ் மொழி மூலமும் கல்வி கற்ற மாணவர்கள்பல்கலைக்கழகத் தில் ஆங்கிலத்தில் எப்படி உயர் கல்விபெறமுடியும்?

இந்நிலையில் சுயபாஷை யில் தான் பல்கலைக்கழகங் களில் மாணவர்களுக்குப் போதனையளிக்கப்படவேண் டும். ஆனாலும் கல்வியின் தரம் குறையாமல் பார்த்துக் மூலம் கல்விகற்று வெளியே றும் கடைசி மாணவர்களாக இருக்கக்கூடும். எனவே இப் பொழுது ஆங்கில மொழி மூலம் உயர்கல்வி பெறும் பல்கலைக்கழக மாண வர்களுக்கு அந்த வசதி தொடர்ந்தும் அளித்து அவர்கள் தங்கள் பட்டப் படிப்பை முடித்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

## கூட்டுறவாளர் தினம்

இன்று கூட்டுறவாளர் தினம். நமது நாட்டில் இத் தினத்தை பல இடங்களி லும் விமரிசையாகக் கொண்டாடுவதற்கு ஏற் பாடு செய்யப்பட்டுள் ளது.

கூட்டுறவியக்கம் இலங் கையில் குறிப்பாக வட பகுதியில் சமீபகாலங்க ளில் அதிக முன்னேற்ற மடைந்துள்ள தென்பது உண்மையே. என்றாலும் முன்னைய அரசாங்கம் கூட்டுறவியக்கத்தை விரி வாக்காமல் தனியார் துறையினருக்கு சிறிது அதிக சலுகைகள் வழங் கியதாக குறைகூறப்படு கிறது. இன்று ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம் சோஷலிஸ்ட் கொள்கை யைப் பின்பற்றுவதாக அறிவித்துள்ளதால் கூட்டு றவு இயக்கத்துக்கு அது தகுந்த இடம் அளிக்கு மெனப் பொதுவாக நம் பப்படுகிறது.

கூட்டுறவியக்கம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த விசாரணைக் கமிஷன் ஒன்று. கூட்டுற வியக்கத்தில் மலிந்துள்ள ஊழல்களை நீக்கி, அதை னச் சீர்திருத்தி அமைப் பதற்குப் பல நல்ல சிபார்சுகளைத் தெரிவித் திருந்தது. இந்தக் கமிஷ னின் சிபார்சுகளை கூட்டு றவு அமைச்சர் விரைவில் அமுல் செய்து கூட்டுற வியக்கத்தைச் சீராக்குவா ரென நாடெங்கிலுமுள்ள கூட்டுறவாளர் எதிர் பார்க்கின்றனர்.

கூட்டுறவியக்கத் துக்கு புத்துணர்ச்சியும் விழிப் புணர்ச்சியும் ஊட்ட வேண்டிய அவசியமேற் பட்டுள்ளது. இதற்குச் சுலபமான வழி விசார ணைக் கமிஷனின் சிபார்சு களை அமுல் செய்வது தான். கூட்டுறவு இயக் கம் உண்மையான ஜன நாயக இயக்கமாக விளங்க வேண்டுமானால் அதன் ஊழல்கள் களையப் பட வேண்டும்.

# தமிழ் நிர்வாக மொழி; ஆங்கிலத்துக்கு உரிய இடம்'!

## 'தமிழரசு' வெளியீட்டு விழாவில் தமிழக முதல்வர் கருணாநிதி

சென்னை, ஜூலை.1 தமிழ் நிர்வாக மொழியாக வும், பிரதான மொழியாக வும் இருக்கும் அதே சமயத் தில் ஆங்கிலமும் உரிய இடத்தில் வைக்கப்பட்டு, பாட சாலைகளில் கற்பிக்கப்படு மென்று தமிழக முதல்வர் திரு மு.கருணாநிதி தெரிவித் தார்.

தமிழக அரசின் 'தமிழரசு' உத்தியோக பூர்வ தமிழ், ஆங்கில ஏடுகளின் முதல் இதழை நேற்று சென்னையில் முதல் அமைச்சர் வெளியி ட்டுவைத்துப் பேசினர்.

'பிற ராஜ்யங்களுடனும், வெளி நாட்டுடனும் தொட ர்பு மொழியாக ஆங்கிலம் உபயோகிக்கப்பட வேண்டு மென்பதற்காக ஆங்கிலம் பாடசாலைகளில் கற்பிக்கப் படும். தமிழ் மொழி நிர்வாக மொழியாகவும், பிரதான மொழியாகவும் இருக்கும்' எனவும் திரு.கருணாநிதிகூறி னர்.

## உற்சவம்

புங்குடுதீவு, புதன் புங்குடுதீவு, இருப்பிட்டி கண்ணகிபரமேஸ்வரி ஆலயஉற் சவம் இன்று கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 9ம்திகதி தேர்த் திருவிழா நடைபெறும். 6ம் திருவிழா தொடக்கம் உற்ச வம்முடியும் வரை தினமும் மகேஸ்வரபூசை நடை பெறும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970- ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

விசையும் ஒருங்கே அடக்க யுள்ளது. அந்தத் தேவைக் குரிய சிறப்புத் தேர்ச்சியை அளிப்பதன் மூலம் பெரும் சமுதாயத்துடன் பொறுப்புள்ள முறையில் இணைந்து செல்லக்கூடிய ஒரு கூட்டுறவுச் சமூகத் தைக் கட்டியெழுப்புவதே கூட்டுறவுக் கல்வியின் பொது நோக்கமாகும். ஆனல் நேரடியாகப் புகட்ட முடி யாத சில உயரிய பண்பு களும் அக்கல்வி அடக்கும். சுருங்கக் கூறின் கூட்டுற வின் மூலம் ஒரு சிறந்த பொருளாதார, சமுதாய ஒழுங்கை ஏற்படுத்துவதற்கு வேண்டப்படும் திருப்பத் தைக் கொடுப்பதே கூட்டுற வுக் கல்வியின் பொறுப்பா யமையும்.

முகாமைக் கேட்டால் பல கூட்டுறவு முயற்சிகள் சோர் வுற்றிருப்பது இலங்கையில் ஒரு பெரும் குறைபாடா தை அளிப்பதுடன் தேவைப்படும்போது தனி யார்துறையின் உத்திகளை யும் ஆராய முற்படவேண்டி யிருக்கின்றது' இவ்வாறு கூட்டுறவுக் கல்வியையும், பயிற்சியையும் குறித்துக் கூட்டுறவு விசாரணைக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

கூட்டுறவு முகாமையை யிட்டு இக்குழு தெரிவித் துள்ள கருத்துக்களும் ஈண்டு நோக்கற்பாலது. 'இலங் கைக் கூட்டுறவு இயக்கம் என்ற பெரியமைப்பில் யாதேனும் உறுப்பு இல் லையா என்று ஆராயுமிடத்து முகாமை என்ற சக்கரப்பல் இல்லாமையே ஒரேயொரு பெருங் குறைபாடாகக் காணப்படுகின்றது ......

இன்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் கருத்தின் படிக்கு ஒரு முகாமையா ளர் ஐந்து தொழிற்பாடு

ஆகவே ஓர் உகந்த ...கத்' வரையறுத்தனர். 'முறை

# இன்று கூட்டுறவுத் தினம்

துவக் கல்வி முறையைப் பயன்படுத்தி நாட்டில் பொருளாதாரத்தைவிருத்தி செய்ய முடியும் அத்துடன் கூட்டுறவு விசாரணைக்குழு கூறியதுபோல் கூட்டுறவு விய பாரம் இலங்கைவாசி களின் கையிலிருப்பதால் வர்த்தகத்தை நாட்டு வாசி களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு, அர சாங்கத் தலையீட்டைத் ...த்து கூட்டு றவே ஒரேயொரு வழியாயி ருக்கின்றது.

இலங்கை குறையபிவிரு த்தி நாடாயிருப்பதால் அதற் கெனச்சில பொருளாதாரப் யபிவிருத்தி நாடுகளின் பொருளாதாரம்' என்ற நூலில் பேராசிரியர் ஜக தீஷ் பகவதி வளர்ச்சிக் குறைவுக்குரியபிரச்னைகளைப் பின்வரும் நான்கு தலைப்பு களில் ஆராய்கின்றார். முயற் சியின் ஆற்றல், வினையான் மைத் தொழிலாளர், நிரு வாகத்தின் தன்மை, நாட் டிற்குரிய குணாதிசயம். இவையாவும் மனிதரை மையமாகக் கொண்டிருப்ப தால் கூட்டுறவுக்கல்வியும் அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையில்பெரும் பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டியி ருக்கின்றது. லேயிட்லோ அறிக்கை கூறுவதுபோல் இந்நாட்டில்கூட்டுறவு இயக் கத்தின் நோக்கம் எதுவா யிருக்கவேண்டுமென்று எம்மை யாராவது கேட் டால் 'ஒரு பொருளாதா ரப் புரட்சியை ஏற்படுத்தல் என்றுதான் நாம் விடை கொடுப்போம்......

'அப்புரட்சி அமைதி யான புரட்சியாமையும், ஆனல் அப்புரட்சி வேக மானதாயும் அடிப்படை மாற்றம் விழைவதாயும் அமையும். அதனுடைய குறிக்கோள் வருமாறு:- நிறைவிளைவு, விளைத்திறன், சமுதாய நீதி. அப்புரட்சி அழிமானத்தை அகற்றி, ஒழுகக்கேட்டைக் களைந்து முறையான உழைப்பைச் சுரண்டி வாழும் சக்திகளைச் சிதைத்தெறியும். நேர்மை யான உழைப்பிற்குத் தகு ந்த சன்மானம் கொடுத்து உற்பத்தியாளரையும் நுகர்ச்சியாளரையும் பாது காக்கும். மனித உழைப் பின் துர்ப்பிரயோகத்தைக் குறைத்து நாட்டிற்காக உழைக்கும் யாவருக்கும், தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்ற பாகுபாடின்றி, தன் மானம் வழங்கும். நேர்மை யும் தன்மானமுமற்ற உழை ப்பிலிருந்து பிறக்கும் சலு கைக்கோ பதவிக்கோ அனு மதிப்புக் கொடுக்கமாட் டாது.''

விவேகம், திறமை, அறிவு ஆற்றல் முயற்சி தூர நோக்கு மனிதத்தன்மை ஆகியன ஒருங்கே வாய்க்கப் பெற்ற அளப்பரிய உற்பத் திச் சதனமாகிய மனித வளத்தை உருவாக்குவது கூட்டுறவுக் கல்வியின் நோக் கமாயமைய வேண்டும்.

# 'சோஷலிஸப் பாதையில் நல்லெண்ணம்வர முயற்சி'

## — கிளிநொச்சி எம்.பி.

நல்லூர், வியாழன்

''மக்கள் அரசாங்கத்திற்கு ஓர் ஆண்டு அவகாசம் கொடுத்துப்பார்ப்போம். அதற்குள் தமிழர்களின் முக் கிய பிரச்னைகள் தீர்க்கப் படாவிட்டால், தமிழ்ப் பகுதிகள் அபிவிருத்தி செய் யப்படாவிட்டால், ஆட்சி மன்றத்தின் உள்ளேயும், வெளியேயும்அரசாங்கத்தை எதிர்காலத்தில் எதிர்ப் போம்.''

நாச்சிமார் கோவிலடியில், தமிழ்க்காங்கிரஸ் எம். பிக் களுக்கு அளிக்கப்பட்ட வர வேற்பில், கிளிநொச்சி எம். பி திரு வி ஆனந்தசங்கரி பேசும்போது மேற்கண்ட வாறு கூறினர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. திரவியநாயகம் தலை மையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி ஆன ந்தசங்கரி மேலும் கூறியதா வது: தமிழரசுக்கட்சியினர் ஆட்சிமன்றத்தில், சிம்மாசன பிரசங்கத்திற்கு 3 திருத்தப் பிரேரணையை கொண்டுவந் தனர். தமிழர் என்ற முறை யில், சமஷ்டி கோரும்பிரே ரணையைத்தவிர. மற்றும் இரு பிரேரணைகளையும் ஆத ரித்தோம். தமிழ் மகன் ஒரு வனுக்கு மந்திரிப்பதவியும், சிறுபான்மை தமிழர் ஒரு வருக்கு நியமன எம் பி. பதவியும் வழங்கியதன் மூலம் இந்த அரசாங்கம் சோஷலிஸப் பாதையில் நல் லெண்ணத்தை உருவாக்க முன் வந்திருக்கிறதென்பது தெரிகிறது ஒருவருட காலத்திற்குள் தமிழரின் பிரச்னைகளை தீர்க்காவிடில், அரசாங்கத்தை எதிர்க்கத் தவறமாட்டோம்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா பேசும் போது கூறியதாவது: தமிழ் மக்களிடையே, இப்போ துள்ள பிரச்னைகளில், அதி முக்கியமான பிரச்னை பொரு ளாதார பிரச்னையே. எமது தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் பொரு ளாதாரப் பிரச்னை தீர்க்கப் படவேண்டும். இதற்கு எம் மத்தியில் உள்ள பணக்காரர் கள் முன்வரவேண்டும். பண த்தை இரும்புப்பெட்டியில் பூட்டிவைக்காமல் அப்பணத் தைக்கொண்டு சிறுகைத் தொழில் நிலையங்கள் அமை க்கவேண்டும். கலை, விஞ் ஞான, பொருளாதார சாஸ் திரபட்டம்பெற்ற வாலிபர் அனைவரையும், சேர்த்து அவர்கள் உதவியுடன் கைத் தொழில் நிலையங்களை அமை க்கவேண்டும். அப்படியா னல்தான் நமதுநாடு சுபீட்ச மடையும். எமது நாட்டின் பொருளாதார பிரச்னை தீர்க்கப்பட்டால், மொழிப் பிரச்னை தானகவே தீர்ந்து விடும்.

இன்றைய அரசாங்கத்தி டம் கைத்தொழில் நிலையங் கள் அமைக்க, நிதியுதவி செய்ய முடியாமலிருக்கிறது அதனல் அரசினர் ஆதர வுடன், பணக்காரர்களின் ஒத்துழைப்புடன் படித்த வாலிபர் கைத்தொழிற்சாலை களை அமைக்கவேண்டும்.

எமது நோக்கம் சிங்கள மக்களுடன் போராடுவதல்ல சிங்கள மக்களுடன் எதிர்ப்பு காட்டி வாழ்வதுமல்ல. அவர்களுடன் சேர்ந்து சோஷலிசப் பாதையில் முன் னேறுவதுதான் எமது கட்சி யின் நோக்கம். இன்றைய அரசாங்கம்சோஷலிசபாதை யில் முன்னேற முன்வந்துள் ளது ஆதலால்தான் ஒத்து ழைப்பு வழங்க முன்வந் தோம்.

ஜப்பான், ஜெர்மனி தேசத் தில் யுத்தம் நடைபெற்ற பின்னர் உடைமைகள் எல் லாம் அழிந்துபோனது. அதன்பின் அந்நாடுகள் செழிப்படையவில்லையா? அங்குள்ள மக்கள் எல்லா ரும் நாட்டை முன்னேற்ற வேண்டும், வேலைசெய்ய வேண்டும் என்ற ஆர்வம் படைத்தவர்களாக இருந் தார்கள், ஆகவேதான் அந் நாடுகள் மீண்டும் சுபீட்சம் அடைந்துள்ளது. அதே போல்தான் நாமும் நமது நாட்டை வளம்பெறச் செய்யவேண்டும்.

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் பேசும்போது, தமிழர் விமோசனத்திற்கு பாடுபடும் எந்தக்கட்சியும் அரசாங்கம் அமைத்தாலும் ஆமோதிப்போம் என்றும் தமிழ்ப்பிள்ளைகளுக்கு தாய் மொழியே போதன மொழி யாக இருக்கவேண்டும் என் றும் கூறினர்.


அராலி வடக்கிலுள்ள ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலில் எல்லா சமூகங்களின் ஒத் துழைப்பாலும் திருப்பணி வேலைகள் முடிந்துள்ளது டன், பக்கத்திலுள்ள அம் மன் கோயிலையும் புதுக்கக் கட்டுவித்து, இம்மாதம் 15-ந் திகதி கும்பாபிஷே கம். 10-ந் திகதி முதல் கிரியைகள் நடப்பதாக வுள்ளது. வாழ்க மங்கையற் கரசிகள்!

0 0 0

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே, படை கள் போல்வரும் பஞ்சமா பூதங்கள், தடையொன் றின்றியே தன்னடைந்தார்க் கெலாம், அடைய நின்றிடும் ஆனைக்கா வண்ணலே.

—அப்பர் அடிகள்.

# மறைந்தும் மறையாத தொண்டர் மணியம்



மணியம்

இந்தப் பெயருக்கே ஒரு மதிப்பு பெயரைக் கேட்டாலே சிலருக்குப்பயம் இது சில வருடங்களுக்கு முன்னிருந்தநிலை மணியம் என்று சொன்னல் மதி புக் குறைவு என்று நினைத்து மணியகாரர் என்று சொல் வதுமுண்டு.

இது அரசாங்க அதிகாரி ஒருவரைக் குறிக்கும் சொல் லாக இருந்ததுதான் இந்த மரியாதைக்கும் பயத்துக் கும் காரணம்.

கோயில் மணியம்.

இப்படியும் ஒரு பெயர். இதுவும் கோயில் நிர்வாகத் தில் ஓர் அதிகாரியாக விளங்குபவரின் அந்தஸ்து. கோயில் ஊழியர்களுக்கு அங்கு குழப்படி செய்யும் சிறுவர்களுக்கு இந்தப் பெயரைக் கேட்டாலே அச் சம்!

மேற் குறிப்பிட்ட இரண்டு மணியங்களின் பெயரும் அதிகாரிகள் என்ற தோரணையில் வந்த பெயர்கள்.

ஆனல் மணியம் என்ற பெயருக்கு ஒரு மரியாதை, மதிப்பு, அச்சம்.

அந்த மணியம் அரசாங்க அதிகாரியல்ல, ஒரு கோயில் அதிகாரியுமல்ல.

அவர் பெயரே மணியம் அல்ல. சுப்பிரமணியம்.

வண்ணை ஸ்ரீ வேங்கடே சவரதராஜப் பெருமாள் கோயில் திருவிழாவுக்குச் சென்றவர்களும் சரி, ஆண் டுக்கொருதடவையாவது சனீஸ்வரப் பெருமானுக்கு எள்எண்ணெய்ச் சட்டி எரி த்து தமதுகஷ்டங்களை நீக் கிக் கொள்ளலாமென்று வருபவர்களும் சரி, பெரு மாள் கோயிலடியில் நடை பெறும் இசை விழாக்களு க்கு வருபவராயினும் சரி இந்த மணியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்க ளாயிருக்க முடியாது.

அரையில் ஒரு வேட்டி, இடுப்பில் ஒரு துண்டு, எப் பொழுதும் மலர்ந்தமுகம், இதுதான் ''மணியண்ணை'' என்று சிறுவர் முதல் வயது வந்தோர் வரை அன்புடன் அழைக்கப்பட்டு வந்த அந்த சுப்பிரமணியம்.

அவர் வேங்கடேசவரத ராஜப்பெருமாளின் தொண் டர், அடியார். அதுமட்டு மல்ல சங்கீதப் பிரியர், கெஞ்சிரா மிருதங்க வாத் தியக்காரர். பெருமாள் கோயில் ஆதீனத்தினல் சுமார் இரண்டு வருடகாலம் தமிழ் நாட்டில் மிருதங்கம் பழகுவதற்கு அனுப்பப்பட் டவர். மணியத்தின் மூச்சே நாராயணு, பேச்சேஇசை; அவர் ஒரு தொண்டர், ஓதுவார், பஜனைக் கோஷ் டியின் அமைப்பாளர். இப் படிப் பல சொல்லலாம். ஆனல் எல்லோருக்கும் இனி யவர், எல்லோரின் நண்பர், உறவினர்.

அவர் மறைந்து இன்று டன் 16 நாட்கள் மறைந்து விட்டன. இன்று அவருக்கு அந்திமக்கிரியை நடைபெறு கிறது.

'ஊரிலேன் காணியில் லேன்

உறவுமற்றொருவரி ல்லேன்''

என்று அவர் பெருமாள் முன்னிலையில் எத்தனையோ தடவை பாடியிருப்பார். அவரை யாரும் இல்லை என்று நாராயணன் விட்டு விடவில்லை. அவரது இறுதி யாத்திரையும் இன்று நடை பெறும் அந்தியேஷ்டிவை பவங்களுமே இதற்குச் சான்று.

மணியம் என்றும் தொண் டர், அவர் என்றும் நினை விலிருப்பார். மறைந்தும் மறையாத மணியம் அவர்!

-ஸ்ரீரங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org